உ

ஸ்ரீ வேலும் மயிலுந் துணை

# வால்மீகர்

# புஷ்பாரூடம்



இஃது

**M. N. பாலகுருசாமி**

அவர்களால் இயற்றியதை

**K. A. மதுரை முதலியார்**


அவர்களால் தமது ஸ்ரீனிவாசா அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட்] 1963 [விலை ரூ. 1-25

ஸ்ரீ வேலும் மயிலும் துணை

# புஷ்பங்களின் அட்டவணை

| | | |
|---|---|---|
| 1 அசோகம் | 21 செண்பகப்பூ | 41 சம்பங்கி |
| 2 ஊமத்தை | 22 தும்பைப்பூ | 42 வெள்ளைரோஜா |
| 3 பாரிஜாதம் | 23 வில்லியம்பூ | 43 சப்பாத்தி |
| 4 கனக்காம்பரம் | 24 பாதிரிப்பூ | 44 வெண்சாமந்தி |
| 5 சூரியகாந்தி | 25 முல்லைப்பூ | 45 ஜாதிமல்லிகை |
| 6 நந்தியாவட்டை | 26 கதிர்ப்பச்சை | 46 மஞ்சள் ரோஜா |
| 7 பத்திராக்ஷி | 27 குண்டுமல்லி | 47 குருவேர் |
| 8 நித்தியமல்லி | 28 ஆவாரம்பூ | 48 அழவனப்பூ |
| 9 பட்டுரோஜா | 29 அந்திமல்லிப்பூ | 49 கொங்குமல்லி |
| 10 புன்னைமலர் | 30 ரோஜாப்பூ | 50 கொடிசம்பங்கி |
| 11 மயில்கொன்றை | 31 பூவரசு | 51 மன்மதபாணம் |
| 12 கொக்குமந்தாரை | 32 மாதுளைப்பூ | 52 வளைஞ்சாமரம் |
| 13 வெண்தாமரை | 33 கொன்றைமலர் | 53 லேடி கனகாம்பரம் |
| 14 முருங்கைப்பூ | 34 பவழமல்லி | 54 பன்னீர் புஷ்பம் |
| 15 மல்லிகை | 35 வேப்பன்பூ | 55 மஞ்சாம்பரம் |
| 16 புங்கன்பூ | 36 செங்கழுநீர் | 56 மகுடம்பூ |
| 17 மகிழம்பூ | 37 தவனம் | 57 நீலோர்பலம் |
| 18 இலுப்பைப்பூ | 38 மரமல்லி | 58 காசி அலரி |
| 19 வாழைப்பூ | 39 செவ் வலரி | 59 துத்திப்பூ |
| 20 இருவாக்ஷி | 40 எருக்கன்பூ | 60 வெண் அலரி |

ஆரூடம் பார்ப்பவர்கள் இதிலுள்ள புஷ்பங்களின் பெயர் ஒன்றையாவது அல்லது புஷ்பங்களின் தலைப்பிலுள்ள 60 நெம்பர்களிலொன்றையாவது நினைத்துக்கொண்டு அந்த புஷ்பத்தின் பெயர் எந்தப்பக்கத்திலிருக்கின்றதோ அந்த ஆரூடத்தைப் படித்து அதிலுள்ள நன்மை தீமையை தெரிந்துக்கொள்ளவும்,

வேலும் மயிலும் துணை

# உரிமை அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத்திபர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும், இன்னும் மற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த வால்மீகி புஷ்பாருடம் என்ற சாஸ்திரம் ஓலையேட்டுச் சுவடியாயிருந்ததை பிரயாசையுடன் சம்பாதித்து இந்நூலுக்கு திரு M. N. பாலகுருசாமி அவர்களால் உரை எழுதப்பட்டு இந்நூலுக்குப் போதுமான பொருட் செலவு செய்து என்னால் கவர்ன்மெண்டில் "ரிஜிஸ்தர்" செய்திருப்பதால் இப்புத்தகத்தை என் அனுமதியின்றி எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன் மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

**K. A. மதுரை முதலியார்**

ஷண்முகாநந்த புத்தகசாலை,

பார்க்டவுன், சென்னை-3

# சோதிட ரகசியம் என்னும்

# அனுபவசுந்த்ரசேகரம்

இவ்வருமையான சோதிட நூலை சோதிட சாஸ்திர வல்லுனராகிய கே. குற்ருலம் பிள்ளை அவாகளால் சப்த ரிஷிகளியற்றிய பற்பல சோதிட கணித நூல்களை கொண்டாரர்ய்ந்து எல்லோரும் எளிதில் உணரும்படி இயற்றியுள்ளனர். இதில் நடபாட்சி யுக்தம், பகை, நீச்சம் அறியும் வகை, கிரக சார சமம் நட்பு பகை அறியும் வகை, ஸ்தான பலன் உணர மகா திசைக்குப் போதகன் முதலியோர்களின் பலாபலன்கள் கிரகங்களின் பார்வை காலம் கிரகங்களின் நோக்கும் ஸ்தானம். நட்சத்திரத்தைக்கொண்டு லக்கினம் அறிய நவக்கிரகங்களின் நிலையறிய கோசார வேதை, கறியும்விதம் கௌரிபஞ்சாங்கம். வருடபலன் மாதபலன், வாரப்பலன், திசைப்பலன். தாரபலன் முதலியவையறியும் வகை, மனைநூல் பார்க்கும்வகை மற்றும் பற்பல சோதிட கணித நுட்பங்கள் இதில் மிகத்தெளிவாக கூறப்பட்டிருக்கிறது.

*இரண்டு பாகங்கள் அடங்கியது. விலை ரூ* **4**.

## அகஸ்தியர் ஆறுமுக சுவாமி வினு விடை

*என்னும்*

## ஜாதக ரகசிய சேகர

# சோதிட அரிச்சுவடி

இந்நூலின் சிறந்த அம்சமானது கிரகசார சக்கரத்துடன் கூடியதும் சோதிடரன்றி சாதரணமானவர்களும் சுலபமாக தெரிந்து கொள்ளுவதற்காகவும் ஜாதகம் கணிக்கவும். ராசி கணிக்கவும்அஷ்டவர்கம் கணிக்கவும் கோசாரம் பன்னிரு பலாபலன்களும் திசாபுத்தி அந்தரபலன்களும் கண்ணாடிபோல் விளக்கி எழுதியிருக்கிறது. இந்த ஒரு புத்தகமே சோதிடத்திற்கு போதுமானது. இதன் விலை ரூ **2-50**

ஷண்முகானந்த புத்தகசாலை. பார்க்டவுன், சென்னை-3

உ

ஸ்ரீ வேலுமயிலுந் துணை

# வால்மீகர்

# புஷ்பாரூடம்

## மூலமும்-உரையும்

### காப்பு

ஆனந்தமாய் நிறைந்ததொரு ஆயிபாதம்
அகண்ட பரிபூரணமாம் அய்யர்பாதம்
வானந்தமாகி நின்ற கணேசர்பாதம்
மருவியதோர் மூலத்தில் நந்திபாதம்
தானந்தமாகிய தோர்தன் வந்த்ரிபாதம்
ஜனகருட வியாக்ரமர் பதஞ்சலியர்பாதம்
மானந்த நாரத மாமுனியின் பாதம்போற்றி
போற்றி புஷ்பாருடம் புகல்கின்றேனே,

### உரை

அண்டரண்டமாகி நின்றவனே காப்பு
ஆனந்தமாகிநின்றவுமையே காப்பு
குண்டமெனுங் குண்டலியின் குறியே காப்பு
குமரகுருவேல் முருகர்பாதங் காப்பு
புண்டரீகமான திருமாலுங் காப்பு
புகழ் பிரம முசும குலிசனைவர் காப்பு
சண்டமெனும் மாருதம்போல் ஆரூடத்தை
சாற்றுகிறேன் குருமுனியின் பாதம் காப்பு

# 1-வது பாட்டு அசோகம்

ஆமப்பா அசோகம் நீ சொன்னதாலே
ஆபத்து சிலநாளில் வந்தே தீரும்
போமப்பா தொழிலுடனே பொருளும் போகும்
பொறுமையுடன் யிருந்தாலும் பகையாமே
நாமப்பா கெடுதல்பல் நோயுண்டாகும்
நன்மையில்லை பெண்ணாலே சதியுண்டாகும்
க்ஷேமத்தை குலைக்கும் உந்தன் வார்த்தை
ஜெகந்தனிலே பொய்யென செப்புவாரே.

உரை:—யோகராசியைப் பார்ப்பவரே— உமதுவாழ்க்கையில் இன்னும் பல துன்பம் அனுபவிக்க வேண்டிய கஷ்டம் யிருக்கிறது நீ எதிர்பார்க்கும் சினேகிதர்களின் உதவியும் உனக்குக்கிட்டாது, நீ கொடுத்த கடன்கள் விஷயமாக கோர்ட்டு விபகாரம் பொருள் விரயம் உண்டாகுமே தவிர வேறுவித நன்மையைக் காண முடியாது. நீ உண்மையாக நம்பியிருக்கும் ஒரு பெண்ணினால் பலவித அபாயமும் பொருள் நஷ்டமும் நல்லவர்கள் பகையும் ஏற்பட ஏது உண்டு ஆதலால் அவன் நேசத்தை விடுவது நலம் உன்னுடைய கிரக கோள்களின் காரணமாக அநேகவித வியாதிகள் உண்டாகும், அவற்றால் பல நஷ்டமும் மனவேதனையும் அடைவாய் இன்னும் 5-மாதங்களுக்கு இந்நிலையில் எந்த மாறுதலும் நீ காண முடியாது எனினும் நீ எதற்கும் அஞ்சாதே எக்காரணத்திலும் ஈடுபட்டு பொருள் நஷ்டமும் உண்டாக்கிக்கொண்டு அதனால் மனவேதனை யடையாதே காரணம் யில்லாத காரணத்தால் சும்மாயிருப்பது நலம் வெற்றியுனக்குக்கிட்ட வேண்டுமானால் பிரதி சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபட்டுவா படிப்படியாக உனது வாழ்வில் ஏற்பட்ட கஷ்டங்கள் நீங்கி சுகப்படுவாய் எதற்கும் அஞ்சாதே சுபம்! மத்திபம்.

# 2-வது பாட்டு ஊமத்தன் பூ

செப்பினாய் ஊமத்தன் பூவதனை நீயே
ஜெகந்தனிலே உனக்கு மெத்த வுதவியுண்டு
உதாசித்த பேர்களுடைய வுறவுண்டாகும்
உந்தனுடைய தொழில்முறையில் மேன்மையுண்டு
பிதாவினுட வர்ககத்தால் செல்வம் சேரும்
பெண்டிரால் மேன்மையுடன் புகழுண்டாகும்
கதியுடனே ஏழாண்டு யோகமுண்டு
களித்திடும் செய்தொழிலில் லாபமுண்டே

உரை: சாஸ்திரம் அறிய ஆவலுள்ளவரே நீர் ஊமத்தன் பூவை சொன்னதால் உன் கிரக நிலைகள் சற்றேனும் கெட்டப்பலன் தரக்கூடிய நிலையில் இல்லாததால் உன்னைப்போல் ஒரு யோகவானைக் காண வியலாது உனக்கு பல விதத்திலும் சுகம் பெறவும் பந்து ஜனங்களால் உதவியும் நட்பும் தாய் தந்தைகள் ஏற்கனவே தேடி வைத்திருந்த புதைப்பொருளும் தன் மனைவியின் யோகத்தினால் அளவற்ற செல்வமும் உன் வாக்குக்கு புகழுண்டாகும்படியும் உன்மனதை சந்தோஷப்படுத்தக்கூடிய மனோசக்தியும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியைப்போல் முகவசீகரமும் உடைய மனைவியை யடைந்திருக்கிறாய் அத்துடன் அறிவு வளர்ச்சியான மக்களை பெற்றிருக்கிறாய் உன்னை எதிரிகள் சூழ்ச்சி செய்து கொடுமைக்குள்ளாக்கிய பல கயவர்கள் இப்பொழுது உன்னிடம் சரணடைந்து உன் வாக்கை தேவவாக்காக நம்பி மதித்து வ வார்கள் உன் தொழில் எவ்வித குறைபாடின்றி லாபஸ்தானமாகவே நடக்கும் இப்படி ஏழுவருடம் யோகமிருப்பதால் பயம் தேவையில்லை யிருந்தாலும் தெய்வ வழிபாட்டையோ தானதர்மங்களை செய்யத் தவறுவதோ நீ மறக்கக்கூடாது. எல்லோரிடமும் நீ நெருங்கிகொள் பெரியோரின் நிந்தனைகளைத் தேடிக் கொள்ளாதே சுபம் உத்தமம்

# 3-வது பாட்டு பாரிஜாத மலர்

தானப்பா உந்தனுக்கு சுக்மோயில்லை
 தரித்திரமும் வறுமை பிணி சூலேநோயாம்

ஆமப்பா வாழ்க்கையிலே இன்னலுண்டு
 அன்புடனே உடன்பிறந்தார் பகையுமுண்டு

போமப்பா யாரிடத்தில் அண்டினாலும்
 புண்ணியனே பொருளுதவி கிடையாதப்பா

காமப்பால் கொண்ட பெண்ணும் பிரிந்து போவாள்
 கனத்தவுடல் நலிவதினால் கலங்குவாயே

உரை :—ராசிபலனைக கேட்கவந்த அன்பரே—கவலைக கொண்டு உன் உள்ளம் வாடுகிறது கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டாததால் பலவிதத்தில் ஏமாற்ற மடைந்து இரவும் பகலும் ஆண்டவனை நினைத்து உன் மனம் அலை மோதுகிறது ஆனால் உன் நெஞ்சம் படும் வேதனை தீர இன்னும் சில நாளைக்கு நற்பலன் கிடையாது. நீ செய்யும் தொழிலில் லாபம் கிடையாது நீ எதிர்பார்க்கும் நண்பரால் உதவி உனக்குக்கிடைக்காது உன் உடலில் பலவித நோய் ஏற்படும் அதற்காக நீ எந்த வைத்தியம் செய்தாலும் குண மாகாது உடன் பிறந்த சகோதர்களாலும் உனக்கு நன்மைக் கிடைக்காது. பந்து ஜனங்களும் அன்பான நண்பர்களும் உனக்கு எதிரியாவார்கள் அதற்காக நீ கலங்காதே உன் கஷ்டம் நீங்கவும் உன் உடல் பிணியகலவும் அடுத்த மாதம்22-ந் தேதி ஆகவேண்டும் அப்பொழுது உனது கிரக நிலை மாறு கிறது அதன் பிறத உன் குடுபபத்தில் நல்ல காரியமும் நீ எந்த தொழில் செய்தாலும் விருத்தியாகி லாபமும் சகோதரா வகையில் நன்மைகளும் நட்பான உறவும் உனது இஷ்டகுல தெய்வத்தை வணங்கி வந்தால் உனக்கு அதிகமாக செல்வாக்கும் வாக்கு மேன்மையும் கிடைக்கும் ஆனால் எதற்கும் அவசரப்பட்டு நிதானத்தைக் கெடுத்துக் கொள்ளாதே பக்தியும் தானதர்மங்களும் செய்வதை கனவிலும் மறக்காதே சுபம்! மத்திபம்.

# 4-வது பாட்டு கனகாம்பரம்

சளங்கின்ற சண்மணியே அப்பாக்கேளு
　　கருத்ததனில் கனகாம்பரம் உதித்ததாலே
விலங்குனக்கு கிடக்குமடா அரசர்குற்றம்
　　வீணே நீ செய்ததினால் அவதியுற்றாய்
நலங்கிடவே உனக்கு ஒரு பெண் கிடைப்பாள்
　　நலமில்லை அவளாலும் சுகமுமில்லை
பளிங்குபோல் உன்னெஞ்சத்தில் கவலைக்கொண்டாய்
　　பதறாதே நவக்கிரக பூஜைபோட,

உரை :—சோதிடம் கேட்க வந்தவரே கவலைக் கொண்ட யோகவானே பெருந்துயரோடு உன் மனம் அலை மோதுகிறது. சில ஆகாத கிரகங்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந் திருக்கிறது, உமது எண்ணங்கள் எதுவும் சுலபமாய் முடியாது, ஆத்திரப்படாதே குடுபத்தில் பலவித தீங்குகள் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் சினேகிதம் கிடைக்கும் ஆனாலும் அவளாலும் உனக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது நீ ஒரு கிரிமினல் குற்றச்சாட்டில் அகப்பட்டிருக்கிறாய் உன் கிரகங்களின் நீச்சப்பலத்தால் அரசாங்கக் கைதியாக நேரும் இன்னும் நாற்பது தினங்களில் உனக்கு ஒரு பெரிய தனவந்தர் சினேகிதம் கிடைக்கும் அதன் பிறகு உன் மனம்போல் நீ நினைத்த காரியம் ஈடேறுவதுடனும் கடன்யில்லாமல் செய்தொழிலில் ஆதாயங்களும் புத்திரர்களால் செல்வாக்கும் எக்காரியத்திலும் மேன்மையுண்டாவதும் நல்ல சுகபோகத்தையும் அளிக்கும் ஆனால் உன் வீட்டில் ஒரு சிறு கண்ணிப்பெண் தீயில் விழுந்து மடிந்து இருக்கிறாள் அதன் ஆத்திரம் நீங்கி அதன் மன சாந்தி உண்டாவதற்கு அதனால் உனக்கு வீட்டில் மங்களமுண்டாவதற்கும் நோய்கள் நீங்குவதற்கும் தெய்வசக்தி உண்டாவதற்கும் நீ சோமவார விரதம் தவறாமல் இருந்து வரவும் ஒவ்வொரு விரததினத்திலும் ஏழைக்கு அன்னமிடவேண்டும் கோவிலுக்கு திருவிளக்குப் போடவேண்டும் அம்மனை பூஜை செய்ய மறவாதே சுபம்! மத்திபம்.

# 5-வது பாட்டு சூரியகாந்திப்பூ

போடப்பா உன்வினைகள் விட்டுப்போச்சி
புத்திரனே ரவிகாந்தி பூவைச்சொன்னாய்

ஆடப்பா எடுத்ததொரு காரியங்கள்
அதிவிரைவில் கூடுமடா பொருளேசேரும்

தேடப்பாபோனபொருள் வந்தே தீரும்
திருடரடா உனக்குபகை அனேகருண்டு

நாடப்பா அவருடன் நீ கூடிடாதே
நன்மக்கள் மாடுமனை மணமுண்டாமே.

உரை :—கிரகநிலை அறிய வந்தவரே—உனக்கு ஆண்டவனின் கருணையும் நண்பர்களின் உதவியும் பந்து ஜனங்களின் ஆருதலான விசுவாசமும் உண்டு தவிற நீ செய்யும் வியாபாரத்தில் அளவற்ற லாபங்கள் கிடைக்கக்கூடிய அம்ச ராசி உனக்கு உண்டு உன் வீட்டில் சில தினங்களில் ஓர் திருமணக்காரியம் நடக்கும் அதனால் லாபம் அடைய வேண்டிய அம்சங்களும் குடும்பவாழ்க்கையில் இன்பகரமான வாழ்க்கைகளும் மேன்மேலும் அதிர்ஷ்டமும் ஏற்படுவதன்றி பால் பசு விருத்தியும் புத்திரவர்க்கத்தினால் ஆனந்தங்களும் நல்ல சுகமும் மனதிற்கு உற்சாகமும் உண்டாகும் உன் கிரக நிலை நல்ல இடத்தில் உச்சஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உனக்கு எவ்விதமான துன்பங்கள் அடைய வழியேயில்லை ஆனாலும் யார் எதை சொன்னாலும் நல்ல வார்த்தைகள் என்று நம்பாதே புறம் பேசி குடிகெடுக்கும் சுயவர் வார்த்தையை கனவிலும் உண்மையென்று நம்பாதே நீ எதிலும் உன் சுய புத்திக்கொண்டே நடந்துக்கொள் ஸ்ரீ தேவியின் பூஜையைவிடாதே எதிலும் நீ வெற்றியடைவாய் சுபம்! உத்தமம்.

# 6-வது பாட்டு நந்தியாவட்டை

ஆமென்று நினைத்ததெல்லாம் ஆகாதப்பா
அற்பருட சிநேகமடா மெத்தவுண்டு
போமென்று பொன்பொருளும் சேதமாகும்
பொன்னவனே நடபாதையில் விபத்துண்டாகும்
நாமென்று உனக்கு துணை நல்கார் ஆகும்
நலங்கெட்டு பதிவிட்டு ஓட்டும்பாரே
தாமென்ற மமதை விட்டு தரணிமீது
தனியனே தேவியுட பூஜைபோடே.

உரை :—யோக நிலையைக் கேட்கவந்த அன்பரே உனது வாழ்க்கையில் அதிஷ்ட வசமான லாபத்தையடைய இடமிருந்தாலும் உன் கெட்ட கிரகங்களின் காரணத்தால் தற்போது குடும்பக்கவலையும் வம்பு வழக்குகளும் பந்துக்களின் உறவினால் பகையும் தேக அசௌக்கியமும் மூர்க்கமான முன்கோபமும் உன்னிடத்தில் பொருந்திருக்கிறது, இருந்தாலும் உன் மனோதைரியத்தை கைவிடாதே யிடைவிடாது நீ துர்க்கையின் பூஜையை செய்து வந்தால் உனக்கு ஏற்பட்டிருக்கும் விபத்து நீங்கி சில நாட்களில் செய்தொழிலில் விருத்தியும் வியாபாரத்தில் மேன்மையும் உத்தியோகத்தில் மேன்மையும் நயவஞ்சகமான சில அற்பர்களுடைய சிநேகம் உனக்கு ஏற்கனவே யிருந்தும் அவர்களை நீ கண்டிப்பாய் விலக்கவேண்டும் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் விரதமிருந்து உன்னால் இயன்ற அளவு தானதர்மம் செய்துவர வேண்டும் உன்னைப்பிடித்து வாட்டும் பீடைகள் நீங்கி பெருமையுடன் சுகமாய் வாழ்வாய் பயப்படாதே தைரியமாய் இரு சுபம்!! மத்திபம்.

# 7-வது பாட்டு பத்திராக்ஷி

செய்யென்று நீ நினைத்ததெல்லாம் கூடும்
சேருமடா உனக்கொரு துணைவன் வந்து
துகையான பொருளுனக்கு கொடுக்கலாகும்
அத்துணைவனுட உதவியினால் செல்வம் ஓங்கும்
பகைபேசும் கூட்டமது நாசமாகும்
வகையான மனை ஒன்று உனக்குக்கிட்டும்
வால்மீகி வசனமது பொய்யாதப்பா

உரை :—ராசி பலனில் உயர்ந்தவரே— உனக்கு நல்ல ராசியின் யோகத்தினால் நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் நுண்ணறிவும் பரோபகாரமும் பொருந்திய மனமும் உண்டு உனக்கு ஓர் புதிய சினேகிதனை அடைவாய் அவன் சீரும் சிறப்பும் பெற்று உத்தம குணமுடையவனாய் இருப்பான் ஆனால் உனக்கு அவனால் எல்லாவித நன்மையும் சுகமும் கிடைக்கும் நல்லக்காரியங்களும் ஆகும் உன்னுடைய பொருளை உண்டுகளித்து வந்த சிலபேர்கள் உன்னை நயவஞ்சகமாய் கெடுக்கப் பார்ப்பார்கள் ஆனால் அவற்றால் உனக்கு ஒருவித தீங்கும் ஏற்படாது உனக்கு புதியமனை ஒன்று கிடைக்கும் நீ அன்பாய் நேசிக்கும் ஒரு பெண்ணால் உதவி ஏற்படும் இன்பகரமான வாழ்க்கையும் நன்மையான காரியங்களும் எதைச்செய்யினும் வெற்றியும் நல்ல லாபகரமானத் தொழிலும் உனக்குக் கிட்டும் ஆயினும் உன் குல தெய்வத்துக்கு பூஜைபோடவேண்டும் என்பதைநீ மறந்து விடாதே சுபம்! உத்தமம்

# 8-வது பர்ட்டு நித்தியமல்லி

பொய்யாது உந்தனுக்கு துலங்கும் யோகம்
புண்ணியனே பகைவர் உறவு அனைத்தும் போகும்
நையாதே நினைத்ததெல்லாம் நடந்தேதீரும்
நாட்டிலுந்தன் புகழுடனே செல்வம் ஓங்கும்
வையாதே போனபொருள் புலனே தோன்றும்
புத்திரர்மேர் வுற்பவிக்கும் புதையல் கிட்டும்
தையலர்கள் வுறவுனக்கு அதிகம் உண்டு
தனஞ்செயன்போல் சுகபோகம் இனியுண்டாமே

உரை :—ஆரூடம் பார்க்க வந்த அன்பரே:— உனக்கு கடவுளின் கருணையால் கண்டவர் பொறாமைப்படும் அளவு செல்வாக்கான வாழ்க்கையும் நோயற்றதிரேக ஆரோக்கியமும், தெளிய மனம் படைத்த பெரியோர்களின் உறவும் காலமெல்லாம் உன்னைப்பகைத்துத்திரியும், கெட்டவஞ்சகர்களின் பிரிவும் அவர்களின் சூழ்ச்சிகள் அம்பலமாகி அவர்கள் வந்து வணங்கப்படும் மேன்மையும் சில நாட்களில் ஏற்படும் உன் உடன் பிறந்தவர்களுக்கு புத்திரவுற்புத்தி புது மனைபுகுதல் மற்றும் வேண்டிய நன்மைகள் ஏற்பட அம்ஸபூண்டு இருந்தாலும் வாரத்திற்கு ஒருநாள் ஏழைகளுக்கு உன்னால் இயன்றயளவு அன்னதானம் செய்து முருகப்பெருமானை வழிப்படவேண்டும் அப்படி தவறாமல் முறைப்படி செய்து வந்தால் மேன்மேலும் அபிவிருத்தி யுண்டாகும் எடுத்தக்காரியமும் நினைத்த எண்ணங்களும் தடையின்றி சந்தோஷகரமாக முடியும் இது சுபம் உத்தமம்.

# 9-வது பாட்டு பட்டுரோஜாப்பூ

உண்டாகும் அலைசலப்பா மோசம் மோசம்
உண்மையடா உனக்கெதிரி பலபேர் உண்டு
பண்டுவினையால் உனக்கோர் ரோகமுண்டு
பாவையர்கள் வஞ்சனையால் பொருளே போச்சி
தண்டு முண்டு செய்ததினால் உனக்கேயேச்சு
தரணிதனில் அநேகருடன் வழக்குண்டாச்சி
கொண்டபெண்டீர் உன்னைவிட்டு போகலாச்சி
குடிகெடுத்த சண்டாளர் உறவை நீக் க'

உரை :—மனக்குறையை போக்க வந்தவரே :-உனக்கு ஆண்டவன் நல்லக்குணத்தையும் பரிசுத்தமான எண்ணத்தையும் கொடுத்தாரே தவிர அதிஷ்டவசமான லாபங்கள் உனக்கு இல்லை உனக்கு ஆகாத காலத்தை நினைத்து நடக்காமல் எத்தனையோ காரியங்களில் ஈடு பட்டு பலவிதமாக பொருளை விரயம் செய்துவட்டு மனம் சோர்ந்து திகைக்கிறாய் நீ இன்னும் மூன்று மாதத்திற்கு எத்தொழிலும் செய்தாலும் விருத்தியாகாது லாபமும் கிடைக்காது அத்துடன் உனது மனைவியும் உன்னை விட்டும் பிரிந்துபோவள் ஆகையினால் நீ உன் பகைவர்களுடைய வஞ்சனையில் சிக்காமல் வெகு தந்திரமாகவும் ஜாக்கிரதையுடனும் நடந்துக்கொள்வது நலம் உன் வருங்காலத்திற்கும் நன்மையுண்டாகும் உனது உடலில் பலவித மானநோய் காணப்படும் அதற்காக சிகிச்சை செய்தாலும் உன் மனதை புண்படுத்துவார்கள் அதனால் அவர்களின் நட்பை விலக்குவது நலம் இருந்தாலும் நீ உன் கஷ்டதிசையைக் கண்டு மனம் கலங்காதே ஆகாத காரியத்தை செய்ய முயற்சிக்காதே உன் முயற்சி வெற்றிபெற மூன்று மாதமாகும் அதனால் நீ உன் குலதெய்வத்துக்கு பூஜைபோடு தெய்வத்தை நினைக்காமலிருக்காதே முயற்சியும் மன தைரியமும் தான் நன்மையுண்டாகும் என்பதை மறவாதே சுபம்! மத்திபம்

# 10-வது பாட்டு புன்னை மலர்

உறவென்று ஒருவரையும் நம்பவேண்டாம்
உன்னைச்சுற்றி பகைவரடா அநேகம் பேர்கள்
அறமில்லா பேய்பில்லி சூன்யங்கள்
அநியாயம் உன் இல்லம் பாழதாச்சி
இறைந்தவொரு பெண்ணாலே இடையூறச்சி
இழிவானதொழில் செய்ய இணங்கலாச்சி
நிறைந்தசெழி உன் வாக்கு பொய்யாய்போச்சி
நீ நினைத்து தொட்டதெல்லாம் நஷ்டமாச்சே

உரை :—யோகத்தை யறிய ஆவலுள்ளவரே:—நீ ன் கிரக நிலையை உத்தேசித்துதான் எதிலும் ஈடுபட வேண்டும் அலக்ஷியமாக நினைத்து நடந்துக்கொண்டாயானால் அதனால் பலவித தீமைகள் காண எவ்விதத்திலும் பலன் இல்லை நீ யாரையும் நம்பி எதையும் செய்யத் துணியாதே அதனால் மறைமுகமான சூழ்ச்சியுடன் உன்னை அரசாங்க விரோதி யாக்கி ஜெயில் தண்டனையடைய வழிசெய்வார்கள் அதிலும் தப்பினாலும் பொறாமைக்கொண்டு தீமை பலர் செய்வார்கள் நீ தொட்ட தெல்லாம் நஷ்டமாகும் சுபம்! இது மத்திபம்.

# 11-வது பாட்டு மயில் கொன்றை

நஷ்டமென்று நினையாதே நலனுண்டாகும்
நாடிசெய்யும் தொழிலெல்லாம் விருத்தியாகும்
கஷ்டம்யினி உனக்கில்லை மேன்மையுண்டு
கன்னிகையின் நேசமுண்டு லாபமுண்டு
நட்புறவே கூட்டுத்தொழில் லாபமுண்டாகும்
நன்மனையும் பால் பசுவும் புகழுண்டாகும்
பெருவாழ்வாம் பெண்குழந்தை வுற்பவிக்கும்
பேரின்ப பெரியோர்கள் சிநேகிதம் உனக்கு உண்டே

தரை :—ஆருடம் கேட்கும் அன்பரே :—நீ உன்கிரக நட்பின் காரணத்தால் ஊக்கமாக எதையும் செய்யவும் நல்ல லாபத்தை யடையவும் ஆண்டவன் உனக்கு அளித்திருக்கின்ருன் அதனுல் நீ ஒருவரின் தயவையோ சஹாயத்தையோ நீ விரும்பவேண்டியதில்லை உன் குடும்பத்திலும் மற்றெந்தக் காரியத்திலும் தைரியமான பெருந்தன்மையான எண்ணமும் ஏழைகளுக்கு அன்பு காட்டுவதும் உன் நல்லக்குணத்திற்கு தக்கவாறு அதிகசெல்வம் செழிம்புற்று விளங்குவதும் உன் வாழ்க்கை வெற்றிகரமாக நடந்து வருகிறது கூடியசீக்கிரம் உனக்கு ஒரு பெண்குழந்தைப் பிறக்கும் அதன்யோக பாவத்தால் ஒருவனின் நேசமும் அதனுல் பல நன்மைகளும் உண்டாகும் இருந்தாலும் சில சத்ருக்கள் கூட்டம் உன்னைக் கெடுக்க திட்டமிட்டிருக்கிறது அவர்களிடத்தில் நீ நிதானமாகவும் தைரியமாகவும் நீ நடந்துக்கொள்ள வேண்டியது ஆயினும் வெற்றி உன்னுடையதே ஓர் ஜீவனின் வறுமையைக் குறித்து நீர் கவலை ப்படுகிருய் அது கூடிய சீக்கிரத்தில் உன்னை தேடி வரும் எதற்கும் நீ உன் தேவதா பூஜையை விடாதே சுபம்! மத்திபம்.

# 12- பாட்டு கொக்குமந்தாரை

உண்டுனக்கு தொட்டதெல்லாம் துலங்குமப்பா
உண்மையிலே ஒருவர் துணை உதவிகிட்டும்
நன்மனையாம் போனபொருள் வந்துசேரும்
நலன் உனக்கு செய்தொழில்கள் விருத்தியாகும்
கன்னிகையாம் உன்மனையில் விவாகம் ஆகும்
கபடமுற்ற உறவெல்லாம் கழிந்தேபோகும்
துன்பவினை உனக்கில்லை புதுவாழ்வுண்டு
துணையென்று வந்தவரால் எல்லாம் ஆமே.

உரை :—அதிர்ஷ்டவசத்தில் மிகுந்தவரே :—உனது கெட்டகிரகத்தின் கோளாறினால் வெகு நாட்களாக பெரும் கவலையடைந்து இப்பொழுது தேறி தெளிந்து மகிழ்ச்சியோடு குடும்பத்தை நடத்தி வருகிறாய் இனி உன் குடும்பம் சீரும் சிறப்புமுற்று மிக்க செல்வ வளம் பெற்று விளங்கும் நீ செய்யும் வியாபாரத்தில் கூட்டாளியாக ஒரு தனவந்தர் வந்து சேருவார் அவரால் உனக்குப்பல நன்மைகள் ஏற்படும் உன் இல்லத்தில் ஓர் விவாக காரியம் நடைபெறும் பால் பசு ஒன்று கிடைக்கும் புதிய மனை வாங்குதலும் பொன் பூஷண சேர்க்கையும் கண்டு நீ வெகு சந்தோஷப்படுவாய் நீண்ட நாட்களாய் உனக்கு பகைவராய் இருந்த உனக்கு அதிக நட்பும் பாசமும் உள்ளவர்களாய் மாறி உனக்கு உதவிபுரிவார் உனக்கு வெளியூர்போக வேண்டிய ராசி இன்னும் 15 தினங்களில் வாய்க்கும் கோரிய காரியம் முடியும் அஞ்சாதே சுபம்! உத்தமம்.

# 13-வது பாட்டு வெண் தாமரை

ஆமென்று நீ நினைத்து தொட்டதெல்லாம்
அழியுமடா பொருள் விரயம் தனமே நாசம்
போமென்று பந்துஜன வுறவு போகும்
பொல்லாத சூலைவலி உன்னை வாட்டும்
நாமென்று துணைநிற்க ஒருவரில்லை
நலமில்லை சுகமில்லை வினைபாம்பாரு
தாமென்ற மனையாளும் பிரிந்து போவாள்
கதிகலங்கி மதியிழந்து கலங்கிடுவாயே

உரை:—மனக்கவலைக்கொண்ட மாண்பரே, நீர் மன வேதனைப் பட்டு எத்தொழில் செய்தாலும் முடிவு பெறுது வம்பு வழக்குகளில் ஈடுபட்டு உன் மனம் வேதனையடை கிறது உன்னைப்பிடித்து வாட்டும் நோயினல் பண விரைய மும் மனதில் பலவிதமான பயங்கர எண்ணங்களும் தோன்று கிறது நீ யாரிடமும் உண்மையாக நடந்துக் கொண்டாலும் உன்மீது பல தப்பெண்ணங்களும் பலவித நிந்தனைகளும் குற்றச்சாட்டுகளும் சொல்ல அஞ்சமாட்டார்கள் அந்த வார்த்தைகளைக் கண்டு உன் மனம் சோர்வடைந்து பல ஹீனத்தினல் சரீர பலம் கெட்டு வ்யாதி யுண்டாகி நீஅவஸ் தைக்குள்ளாகுவாய் உன் ஆகாத கிரக நிலையின் காரணத் தினல் சற்று நிதானமாக நடந்துக்கொள்வது நலம் நீ கொஞ்ச காலத்திற்கு மனஅமைதியுடன் இருந்தால் இன்னல் நீங்கி சுகமடைவாய் எதிலும் புத்திசாலித்தனமாக நடக்க வேண்டும் பொருமை எண்ணம் உனக்கு ஏற்பட்டாலும் நீ அதை அப்படியே மாற்றிக்கொண்டு நாற்பத்தியொரு நாளைக்கு நவக்கிரகத்தைச் சுற்றி தீபம் போட்டு வெகு பய பக்தியுடன் பூஜை செய்து வந்தால் உன் கெட்ட கிரகங் களின் கொடுமை நீங்கி சிறுக சிறுக நன்மையுண்டாகும் சுபம்! உத்தமம்,

# 14-வது பாட்டு முருங்கைப்பூ

இடருண்டு முருங்கப்பூ வந்ததாலே
இடம் விட்டு மாற்றிவைக்கும் கொடிய நோயால்
படமுடியாதொல்லை யெல்லாம் வந்தேகீரும்
பாலருடன் பந்துஜெனம் பிரிந்துபோகும்
திடமான நெஞ்சமது கலக்கமாகும்
திருடருடன் தீயதனல் பொருளே நஷ்டம்
நடக்காது சுபமென்ற காரியங்கள்
நாலைந்து வாரமது கழியநன்றே.

உரை :—கிரக நிலையை பார்க்க வந்தவரே—உமது கிரக நிலையில் வெற்றி யென்பதில்லை ஆதலால் தற்சமயம் நீ இருக்கும் இடத்தை விட்டு இடம் மாறி தொழில் புரிய நிலையில் இருக்கின்றீர் அதிலும் நஷ்டமே ஒழிய லாபமில்லை உமக்கு இருக்கும் இருதய நோய் பலமாக பாதிக்கப்பட்டு வருகிறது. அதனுல் பண விர்யம் ஏற்படும் உன் பிரியமான நண்பர்கள் உன் சுற்றத்தார்கள் உன் அன்பிற்குறியசகோதரர்கள் உன்னை இவர்கள் எல்லோரும் விட்டுப் பிரிய நேரிடும் அதனுல் நீ அல்லல்பட ஏதுவாகும் திருடர் பயத்தாலும் தீயின் விபத்தினுல் சேத மடைவதுடன் அந்த சனிபகவானைக் குறித்து ½ மண்டலம் தீபம் போட்டு முறைப்படி பூஜித்து வந்தால் உன் கஷ்டம் விலகி சுகப்படுவாய் அத்துடன் பிரதி சனிக்கிழமைதோறும் விரதமிருந்து ஏழைகளுக்கு அன்னமிட்டு நீ விரதம் முடிப்பது நலம் தவிர நீ எத் தொழிலிலும் இன்னும் ஒரு மாதம் ஈடுபடாமலிருப்பது சுகம் படிப்படியாக உன் கிரகங்கள் மாறிவர நன்மை யுண்டாகும். சுபம்! மத்திபம்.

# 15-வது பாட்டு மல்லிகைப்பூ

கழிந்திடவே மல்லிகைப்பூ வந்ததாலே
கண்மணியே எண்ணமது ஜெயமதாகும்
பலித்திடவே பாலர்களால் குடும்பம் ஓங்கும்
பலவிதநோய் சஞ்சலங்கள் பறந்தே போகும்
களிந்திடவே வியாபாரம் மெத்த ஓங்கும்
கருணையுள்ள வடிவேலர் கிருபையுண்டு
ஒழிந்துவிடும் சஞ்சலங்கள் பீடையாவும்
உண்மையது வால்மீகி புகன்றிட்டேனே

உரை :—கவலைக்கொண்ட மாண்பரே—கடவுளின் கருணையால் உனது கிரக நிலைகள் நல்ல அம்ஸம் பெற்றிருப்பதால் நல்ல யோகமும் சிறந்த யோசனைகளும் மிகுந்த பொருள் வருவாயும் அறிவில் சிறந்த பெரியோர்களின் சேர்க்கையும் செய்தொழிலில் விருத்தியும் வியாபாரத்தில் அளவற்ற லாபமும் உண்டாவதும் தவிர உடல்பிணி மன வேதனை நீங்கி சந்தோஷமான வாழ்க்கைக்கு இடமுண்டு குழந்தைகள் படிப்பு உத்தியோகம் உயர்வு எடுத்தக் காரியத்தில் தோல்வி யில்லாத வெற்றி மனச் சந்தோஷம் அன்போடு கூடிய சிநேகிதர்களின் நட்பு பந்து ஜன உறவு கடவுள் பக்தி உண்டாயினும் நீ வாழ்க்கையில் வளர்ந்துள்ள சந்தோஷத்தால் ஏமாந்துவிடாமல் பிரதி திங்கட்கிழமை தோறும் விரதமிருந்து ஏழை எளியோர்களிடம் அன்பும் தான தர்மமும் செய்துவந்தால் மேன்மேலும் செல்வம் செழிப்புற்று விளங்குவதோடு செய்தொழிலில் அதிக லாபங்களும் விருத்தியும் உண்டாகும். சுபம்! உத்தமம்.

# 16-வது பாட்டு புங்கன்பூ

போமப்பா நினைப்பதெல்லாம் தவறிப்போகும்
பொல்லாத புங்கன்கன் பூவு வந்ததாலே
காமப்பால் எரித்தசிவன் சொன்னவார்த்தை
கண்கலங்கி கதிகெட்டு நிற்கச்செய்யும்
ஆமப்பா அடுத்தவரால் கெடுதியுண்டு
அப்பனே பொருள் நஷ்டம் வியாதிபீடை
தாமப்பா தொழில்போகும் தயக்கம் உண்டாம்
தனித்தொரு உறவெல்லாம் பகையதாமே.

உரை:—சந்தோமற்ற உமது கிரக நிலையைக் காண மிக்க மனவேதனை யுண்டாகிறது. உன் குடும்பத்தில் பல கோளாறுகளை நினைத்தும் மாளாத கவலைகளைக் கொண்டும் மனம் சஞ்சலித்து ஆண்டவனைக் குறித்து நீ மிக மனம் வருந்துகிறாய் நீ எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை நீ செய்யும் தொழில் அத்தனையும் நஷ்டம் ஏற்படுகிறது. உனது கலங்கிய உள்ளம் சாந்தி ஏற்பட ஸ்ரீ முருகப்பெருமானுக்கு விரதமிருந்து இடைவிடா பக்தி சிரத்தையுடன் நீ தெய்வத்தை பூஜை செய்துவந்தால் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டம் சிறுக சிறுக நீங்கி சுகமேற்படும் இன்னும் மூன்று மாதங்களுக்கு உன் கிரகங்களின் நிலை மாறினால் உனக்கு சில நன்மைகள் உண்டாகும் எதற்கும் அஞ்சாமல் திட சித்தத்துடன் எக்காரியத்திலும் ஈடுபடவும் வஞ்சகர்களின் சேர்க்கையை விட்டுவிடு. சுபம். பத்திபம்.

# 17-வது பாட்டு மகிழம்பூ

மயங்காதே மகிழம்பூ வந்ததாலே
மணம் பால வாழ்வுண்டு பகையும் போகும்
நயம்பெறுக பேசுவோர் உறவை நீக்கி
நன்மையுண்டு சுகமுண்டு வாழ்வுமுண்டு
தியங்காதே மைந்தர்களால் சிறப்புமுண்டு
ஜெயம் பெருகும் அருள்பெரும் வளமுண்டாகும்
நயங்கான உறவினரால் நன்மையுண்டு
நாடினதெல்லாம் கிட்டும் நலிந்திடாதே.

உரை :—யோக திசையை தெரியவந்த உத்தமரே — ஆண்டவனுடைய கருணையால் களிப்புற்றும் செல்வமும் கபடமற்ற சிநேகிதர்களின் உறவும் புத்திமான்களின் சிநேகமும் கருத்தினில் ஆழ்ந்து யோசிக்கும் திடமான எண்ணமும் எத்தொழிலையும் ஆர்வத்துடன் செய்து முடிக்கும் மனோ சக்தியும் உனக்கு உன் செல்வத்தின் பெறுமையைக் கண்ட சில வுறவுங்கூடி சதிசெய்ய நினைத்துப் பல நயவஞ்சக கூட்டத்தாரைக் கண்டு நீ கொஞ்சமேனும் பயப்படாதே மனத்தளர்ச்சி யடையாதே உனக்கு பந்து ஜனங்களால் உறவும் அன்பும் உன் கூட்டுத் தொழிலில் சேர்ந்திருக்கும் பணி ஆட்களின் நட்பும் சொல் திறமையும் உனக்கிருக்கின்றபடியால் நீ ஏன் எதற்கும் பயப்படவேண்டும் அவர்களால் உனக்கு மென்மேலும் அதிக நன்மை யுண்டாகும் பிரிந்துபோனவர்கள் யாராயினும் வந்து கூடுவார்கள் விரோதிகள் உன்னிடம் வந்து அடிபணிந்து உன்னிடம் அன்புடன் நேசிப்பார் அஞ்சாதே. சுபம் ! உத்தமம்.

# 18-வது பாட்டு இலுப்பைப்பூ

நலிந்திடவே இலுப்பைப்பூ வந்தாலே
நன்மையிலே பீடைநோய் பொருளே நாசம்
கனிந்திடவே கன்னிகையால் கலகமுண்டு
கடுகடுத்து உறவினரும் பகையாய் போவார்
மலிந்திடவே சதிபுரிவார் இழிச்சொல் சொல்வார்
மறைமுகமாய் ஏவலுடன் முறைப்பாடெய்வார்
அழிந்திடவே எத்தொழிலும் நஷ்டமாகும்
அரணை வடுகனுக்கு பூஜைபோட,

உரை:—சாஸ்திரம் கேட்கவந்த அன்பரே—கவலையால் மனங்கலங்கி கஷ்டதிசையை காண சகியாது மனம் வருந்துகிற உமது கிரகபலன் சீரான நிலையில் இல்லை கபட நெஞ்சம் உடையவர்களின் வலையில் சிக்கி உன் கைப்பொருள் இழந்து தீராத தரித்திர திசையை நீயே ஏற்படுத்திக்கொண்டாய் இனி என்ன செய்யலாம் எத்தொழிலில் நீ கவனமாக ஏற்பாடியற்றினும் அதிலும் பயன்படாததைப்பற்றி நீ அதிக மனவேதனைக்குள்ளாகி நம் குடும்பம் இனி ஓங்குமா எப்படி உயிர் வாழலாம் உனது உடல் பலவிதமான பிணி பாதை ஏற்படும் தொழில் முறையில் நஷ்டமும் வாழ்க்கையில் வறுமையும் போக்கிக்கொள்ள நீ கால பைரவர்க்கு பூஜை போட்டும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் விரதமிருந்து ½ மண்டலம் பைரவர்க்கு தீபம் போட்டும் வந்தால் கஷ்டம் நீங்கி சுகப்படுவாய். சுபம்! மத்திபம்,

# 19-வது பாட்டு வாழைப்பூ

போடவே புகழுண்டு பொருளும் சேரும்
புண்ணியனே வாழைப்பூ நினைத்ததாலே
தாடடிகமாய் கவலையுடன் கஷ்டம் நீங்கும்
தப்பாது இல்லத்தில் புதையல் கிட்டும்
மாட்டிமையாய் போனபொருள் வந்துசேரும்
மைந்தனே சென்றோரும் வருவதாகும்
ஆட்டிகமாய் உனதுபுகழ் எங்கும் ஓங்கும்
அறைந்திட்டேன் வால்மீகர் முனிவன்தானே.

உரை :—யோக திசையில் உயர்ந்தவரே—உமக்கு இறைவனின் திருவருளால் எக்காரியத்திலும் இடைவிடா முயர்ச்சியும் பந்துஜன மனைவி மக்கள் மீது அன்பும் அஞ்சாத நெஞ்சமும் அமைந்திருக்கிறது உமது யிடைவிடாது முயர்ச்சியின் பயனாக உனது வியாபாரத்தில் நல்ல லாபங்களும் அதன் மூல்யமாக உன் வாக்கு வெற்றியும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்வாய் உனது இல்லத்தில் முன்னோர்களால் மறைத்து வைக்கப்பட்ட பொருள் உனக்குக் கூடிய சீக்கிரத்தில் கிடைக்கும் உன்னை விட்டுப்போன உறவினர் நீ இருக்கும் இடம் தேடி வாவார்கள் நல்லக் குழந்தையை பெற்று பால் பசு புதுமனை பெறுதல் இவைகளோடு கூடிய இன்பகரமான வாழ்வு உனக்கு அமையப் போகிறது நல்லவர் நேசம் செய்தொழில் விருத்தி பகைவர்கள் வெற்றி திட ஆரோக்கியம் பேறும் புகழும் பெற்று மகிழ்வோடு வாழப்போகும் நீ பிரதிவாரம் வெள்ளிக்கிழமை தோறும் உன்னால் இயன்றளவு தானதர்மம் செய்து வருவது நலம், சுபம் ! உத்தமம்.

# 20-வது பாட்டு இருவாக்ஷி

அடையாத துன்பமெல்லாம் அடையநேரும்
அப்பனே இருவாக்ஷி நீ நினைத்ததாலே
தடையாகும் திருமணமும் தட்டிப்போகும்
தனையருடன் பசுமனையும் பாழதாகும்
பதிவிட்டு பரதேசம் போகச்செய்யும்
படைக்கஞ்சா நெஞ்சமது பயமேதோணும்
முடையான கடனாலே கஷ்டமாகும்
மூன்றுதிங்கள் சென்றபின்பு சுகமுண்டாமே.

உரை :—ஆரூட பலனைக் கேட்க ஆவல் கொண்டாரே உன் ஆகாத கிரகங்களின் நிலையினால் அலைச்சலும் அபாயமான பல துன்பங்களும் வீண் செலவினங்களும் நீயாருக்கு நன்மை செய்தாலும் அவர்கள் உனக்கு யெதிராக தவறான செய்கையாக நடந்துகொள்ளும் முறையைக் குறித்து நீ மனவேதனை யடைவதும் தீராத கடன் தொல்லையும் அளவற்று வறுமையையும் உன்னைப்பிடித்து வாட்டுகிறது இக்கவலையே உனது மனநோயாக வந்து மனைவி மக்களைப் பிரிந்து பரதேசியாய் போகவேண்டுமென்று உனது நலம் உன் கெட்ட கிரகம் நீங்கி சுகமடைய இன்னும் 6-மாதமிருக்கிறது அதனால் நீ ஸ்தல யாத்திரைக்குப் போய்வருவது நலம் மன நிம்மதி ஏற்படும் நீ யாரையும் நம்பி எத்தொழிலும் செய்யாதே தைரியமாக யிறு சிறுக சிறுக நன்மை கிடைக்கும் சுபம் ! மத்திபம்.

# 21-வது பாட்டு செண்பகப்பூ

சுகமுண்டு செண்பகப்பூ வந்ததாலே
சுந்திரனே நினைத்ததெல்லாம் முடியும்பாரு
புகழுண்டு வாழ்வுமுண்டு மைந்தருண்டு
பணமுடைகள் தீர்ந்து கடன் தொல்லைபோகும்
அகமுண்டு பந்துஜன உறவுண்டு அருளுண்டு
இல்லத்தில் புதையல் கிட்டும் சிறப்புண்டாகும்
ஜெகம் புகழும் வால்மீகி முனிவன் சொல்லை
திடமென்று நம்பி நீ சென்றிடாயே.

உரை :—கிரக நிலையை யறிய வந்த யோகவானே — உனக்கு பல பெரியோர்களின் உதவியும் நல்ல சினேகிதர்களுடன் சகவாசமும் இருப்பதால் சிறப்போடுக் கூடிய செல்வாக்குடன் ஜீவித்து வகிருய் நீ எத்தொழிலில் ஈடுபடினும் முன்னேற்றமான மேன்மையடைய வழியுண்டு உன்னை விட்டு போனப்பொருளோ ஜீவனோ சில நாளைக்குள் உன்னை வந்து அடையும் நீ எத்தொழில்களை செய்பினும் இச்சமயம் சிறந்த ஆதாயம் உண்டாகும் தவிர உன் இல்லத்தில் சுப காரியங்களும் மனைகோல நல்ல லாபமும் பொன் பொருள் வரவும் பல காரியங்களில் வெற்றியும் உண்டாகும் சிறந்த ஆரோக்கியமும் தடையில்லாத லாடமும் நிறைந்த வருமானமும் நிரந்தரமான வாழ்க்கையில் வெற்றியும் உண்டாகும். பயம் வேண்டாம் உன் சொந்தமான குலதெய்வத்தை இடைவிடாமல் பூஜிப்பதுடன் முருகப் பெருமானுக்கு விரதமிருந்து அபிஷேக ஆராதனைகள் தான தற்மங்கள் செய்துவர அதிக செல்வமும் நோயற்ற வாழ்வும் புகழும் உண்டாகும். சுபம்! உத்தமம்.

# 22-வதுபாட்டு தும்பைப்பூ

சென்றிடாய் தும்பைப்பூ வந்ததாலே
செய்தொழில்கள் விருத்தியில்லை நஷ்டமுண்டு
பெய்திடாய் வார்த்தையெல்லாம் பொய்யாய் போகும்
புண்ணியனே நண்பருட பகையே சாரும்
வைத்திடாய் கடன்தொல்லை வியாதிபீடை
வருத்தமடா வறுமைநோய் அதிகரிக்கும்
மன்றில்வளர் குமரனுட பாதம் தொட்டு
மைந்தனே மண்டலம் நீ பூஜைபோடே

உரை :—கிரகத்தின் கோளறிய வந்த புண்ணியவானே உனது பொல்லாத காலமும் நிவற்ற வாழ்க்கையும் உன் சொல் நம்பிக்கையில்லாத செயலும் வீண் செலவும் விபரீத கலகமும் கைப்பொருள் விரயமும் வியாபார நஷ்டமும் பார்க்கு நன்மை செய்யினும் தீமையே ஏற்படுவதுமான நிலை உனக்கு இந்த ஒரு வருடமாக இருந்து வருகிறது இன்னும் மூன்று மாதத்திற்கு எவ்வகை தொழிலும் அதிக அளவில் லாபமடைய முடியாது எனினும் சண்டை சச்சரவு தொழிலில் நஷ்டம் வேதனை யடைவாய் அதனால் நீ வருத்தப்படாதே நவக்கிரக ஆராதனை ½ மண்டலம் பூஜைசெய்து வந்தால் உன் கிரகத்தின் கொடுமை மாறி சற்று மனவேதனைக் குறைந்து எத்தொழிலும் செய்ய விருத்தியுண்டாகும் தானமும் செய்யலாம். சுபம் ! மத்திபம்.

# 23-வது பாட்டு வில்வம்

போடே நீ வில்வதனம் உதித்ததாலே
பொன்னவனே உனக்கெதிர் நாசமாவான்
தேடாத பொருளெல்லாம் வந்துக்கிட்டும்
தென்டனிட்டு பகைவரெல்லாம் உறவாய்போவார்
வாடாதே வந்தவினை வியாதிபோகும்
வலியவந்து பெண்தருவார் மணம் முடிப்பாய்
நாடாதே துஷ்டருட சினேகம் நீக்கு
நயந்து வந்து கெடுதல் செய்ய நினைப்பாரப்பா

உரை :—யோகபர்வத்தை அறிய ஆவல்கொண்டவரே உனக்கு நல்ல யோகமும் நிறைந்த செல்வமும் நீண்ட புகழும் இவைகளைக் கொடுக்கக்கூடிய சுக்கிரதிசை நல்ல யிடத்தில் சஞ்சரிப்பதால் இனி உனக்கு மனக்கவலை யில்லை நீ செய்யப் போகும் எத்தொழிலும் அபிவிருத்தியும் சத்துருக்கள் உன் னைக் கண்டு சரணடையவும் தவிர குடும்பத்தில் சதிபதி களின் ஒற்றுமையான குடும்ப வாழ்க்கையும் குழந்தை களின் கல்வியில் முன்னேற்ற நிலைமையும் வெளியூர்களி லிருந்து நல்ல செய்தியும் உன் கைவிட்டுப் போனப்பொருள் திரும்பக் கிடைப்பது வீடு நிலம் எதிர்பாராமல் கிடைப் பதும் அதிர்ஷ்டவசமான லாபமும் பால் பாக்கியமும் முதலிய அரும் பெரும் பாக்கியமும் ஏற்பட ஏதுவாகும் மனையில் மக்களுக்கு சுபகாரியங்கள் செய்ய ஏற்படுவதும் தன் மனைவியினுல் பொருள் வந்துக் கூடுதலும் உன் வாழ்க் கையில் நிரந்தரமான பக்தி விஸ்வாமுள்ளவர்களின் உறவும் ஏற்பட்டு சரீரத்தில் ஆரோக்கியம் ஏற்பட்டு வற்றாத செல் வத்துடன் கூடிய வாழ்க்கை உமக்கு நிரந்தரமாக அமையும் சுபம் ! உத்தமம்.

# 24-வது பாட்டு பாதிரிப்பூ

நினைத்ததொரு எண்ணமது முடியுமப்பா
நின்றதொரு பாதிரிப்பூ உதித்ததாலே
கனித்ததொரு மனைவிமக்கள் சுகமாய் வாழ்வார்
கவலையில்லை கருமவினை தொலைந்துபோச்சு
தனித்ததொரு பகையெல்லாம் நாசமாச்சு
தனஞ்ஜெயனே சரித்திரமும் இல்லை இல்லை
பணித்ததொரு திருமணமும் கூடும் கூடும்
பால் பசுவும் விருத்தி சுகம் பயப்படாதே.

உரை :—பலாபலனைக் கோரிவரும் உத்தமரே—கண்டவர் நடுக்கிட திறமை மிகுந்த வாழ்க்கையும் கதியென வைத்தவரைக் காப்பாற்றும் காருண்யமும் நினைத்தக் காரியத்தை எவ்விதமேனும் முடிக்கும் ஆர்வமும் கபடமில்லாமல் தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாதுகாக்கும் மனோ தைரியமும் உனக்கு ஆண்டவன் அளித்திருக்கிறான் அதனால் இதுவரையில் நீ எடுத்த காரியங்கள் தடையின்றி உன் பகைவர்கள் நயவஞ்சகமாக செய்துவரும் தீமைகள் அத்தனையும் பயனற்றதாக போய்விட்டன உன் குலதெய்வத்தை மறக்காதே உன் குணத்திற்கு தகுந்த பத்நிசாலித்தனமானவர்கள் கிடைத்திருப்பதினால் இச்சமயத்தில் வெற்றிப் பெறுவதற்குரிய எத்தொழில் செய்யினும் லாபம் கிடைக்கும் நீ பிறருக்கு உபகாரியாக யிருக்கும் நீ உன் வாழ்க்கையில் மேலும் அபிவிருத்தி யடைய நேரும் எதற்கும் அஞ்சாதே: சுபம்! உத்தமம்,

# 25-வது பாட்டு முல்லைப்பூ

பகருகிறேன் முல்லைப்பூ பகர்ந்ததாலே
பர்வியாம் சனியன் உனைதொடர்ந்து விட்டான்
தகரவே கைப்பொருளும் விரையமாகும்
தனித்ததொரு மாடுகன்று சேதமாகும்
அலரவே கன்னிகையால் கலகமாகும்
அப்பனே எத்தொழிலும் நஷ்டம் நஷ்டம்
புகலுகிறேன் பொருளியும் புண்போல் நெஞ்சல்
புண்ணியனே அரசர்பயம் நேரும்தானே.

உரை :—அதிர்ஷ்டத்தை அறிய ஆவலுள்ளவரே—இப்பொழுது உன் கிரகம் நீச்ச நிலையில் பகைகொண்டிருப்பதால் உன் குடும்ப வாழ்க்கையில் வறுமை மிகுந்து நோயினால் உன் உள்ளம் நொந்து கவலையின் கஷ்டம் மனவேதனையும் நிறைந்ததாக யிருக்கிறது உனது சினேகிதர்கள் உன்னைப் பகைக்கும்படியான நிலை ஓர் பெண்ணினால் ஏற்படலாம் இடம் விட்டு இடம் போகவேண்டிய அவல நிலையும் அரசாங்க விரோதமும் திருடர்கள் பயமும் தீராத மனவேதனையும் தளராத சஞ்சலமும் உண்டாகும் இந்நிலை மாற நான்கு மாதங்கள் கழியவேண்டும் இதுவரையில் புத்தியை சிதறவிடாமல் நயவஞ்சக நண்பர்களோடு உறவுகொள்ளமலும் உன் விடாமுயற்சியும் நிகரற்ற திடசித்தமும் ஆண்டவனை துதி செய்துவந்தால் நல்லப் பலனைக் கொடுக்கக்கூடிய கிரகமில்லை ஏற்படும் நீ ஒன்றுக்கும் அஞ்சாதே சுபம்! மத்திபம்.

# 26-வது பாட்டு கதிர்ப்பச்சை

நேருகின்ற இடைஞ்சலது விலகிப்போகு
நெஞ்சினிலே கதிர்பச்சை வந்ததாலே
பாரில் நின்று நீ செய்த்தொழில்கள் தழைத்தோங்கும்
பயமில்லை வினையில்லை நோயும் நீங்கு
ஆறியதாய் கொடுத்தக்கடன் வரவுமுண்டு
அடுத்தவர்கள் உதவியினால் செல்வம் பொங்கும்
ஊரினிலே உனக்குநிகர் யில்லைக்கண்டாய்
உத்தமனே அரசனைப்போல் வாழ்வாய்பாரே.

உரை :—யோகதிசையை பார்ப்பவரே — ராஜயோகத் தோடு கூடிய உனது ராசி உமக்கு அமைந்திருக்கிறது அதில் காரராசி யிருப்பதின் போகப் பலனைக் கேட்பவர் திகைத் துப் போவார்கள் ஆண்டவன் உமக்கு நிறைந்த செல்வமும் நிதான புத்தியும் நீ செய்யும் தொழிலில் குறைவில்லாத அதிக லாபமும் உன் கைவிட்டுப்போன பொருள் நீ விரும்பா விட்டாலும் அந்த பொருள் உன்னைத் தேடிக் கிடைக்கக் கூடிய யோகமும் எந்தக் காரியத்திற்கு முயற்சித்தாலும் அக் காரியம் வெற்றியாக முடிவதும் அறிவான சினேகிதர்கள் உன் டம் கூடுவதால் மேன்மையும் யோகிகளான பெரி யோர்களின் ஆதரவும் அன்பும் அவர்களின் உதவியால் பல வித தொழில்களில் வெற்றி நடந்து அதிக லாபமடைதலும் இந்த செல்வாக்கை நம்பி செருக்கடைந்து உன் குல தெய் வத்தை வணங்க மறந்துவிடாதே. சுபம் ! உத்தமம்.

# 27-வது பாட்டு குண்டுமல்லிகை

வாழ்வுண்டு மனமதிலே நினைத்ததெல்லாம்
மைந்தனே முடிந்துவிடும் கவலைவேண்டாம்
பாலுண்டு பழமுண்டு சுகமாய் வாழ்வாய்
பட்டணத்தில் வீடொன்று புதிதாய் கிட்டும்
செயலுண்டு கன்னியர்கள் சேர்க்கையுண்டு
சிற்றரசர் உனக்குநிகர் ஆமோசொல்
மாலுண்டு பந்துஜன சேர்க்கையுண்டு
மைந்தனே போனபொருள் கிடைக்கும்.

உரை :—அதிஷ்வச முள்ளவரே — கடவுளின் கருணையால் சிறப்போடுக் கூடிய செல்வமும் கபடமற்ற உறவினரும் அறிவில் சிறந்த பெரியோர்களின் நேசமும் உமக்கு கிடைத்தருக்கிறது நீ செய்யும் எத்தொழிலும் மேன்மையடைவதே தவிர லாப ஸ்தானத்தைக் கூடிய நல்ல பலனைத் தரும் சிறப்போடு கூடிய நல்ல மனை யொன்றையும் நீ நகரத்தில் பெறுவாய் நல்ல பால் சிறந்த பசுவும் வனுவோடு கூடிய குழந்தைகளின் சொற்களும் உன்னை மகிழ்விக்கும் நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் நிறைந்த உமது வாழ்வில் எந்த விதமான மாறுதலும் தற்சமயம் கிடையாது நீ கூடும் சிநேகிதர்கள் நல்லவர்களா என்பதை மட்டும் யோசித்து நடத்தல் நலம் தர்மம் செல்வதை தவற விடாதே காருண்யத்தோடு கூடிய உன் நெஞ்சை திடமாக வைத்துக்கொள் வெற்றி உன் வாழ்வில் கிட்டும். சுபம் உத்தமம்.

# 28-வது பாட்டு ஆவாரம்பூ

பாரப்பா மனத்துயரம் மெத்தவுண்டு
பரிந்துநின்ற ஆவாரம் பூவைச் சொன்னாய்
நேரப்பா செய்தொழிலில் அலைச்சலாச்சி
சினமிகுந்த பிள்ளைகளால் துயரமாச்சி
கோரப்பா கலகத்தால் குடும்பம் போச்சி
குணங்கெட்டு பலவிதமாய் அலைச்சலாச்சி
வீரப்பா நாற்பது நாள் சென்றதானல்
விதித்தபடி நடப்பது வுண்மைதானே,

உரை :—கவலையால் மெலிந்தவரே — உன்னை ஆண்டவன் பல வழியிலும் சோதித்து வருகிறான் அவற்றிற்கு அஞ்சாமல் எத்தனையோ கஷ்டங்கள் சமாளித்து வருகிறாய் ஆயினும் உன் மனச்சஞ்சலம் அளவற்று கலக்கமுற்று நமது வறுமை நீங்க வழியில்லையே என்று கலங்கி வாடுகிறாய் உமது பாபக்கோள்கள் நீச்சமடைந்திருப்பதால் இன்னும் சில நாளைக்கு நீர் செய்யப்போகும் தொழிலில் நஷ்டமும் அபஜெயமும் எதிரிகளால் தொல்லையும் உடல் பிணியால் மனவேதனையும் வறுமையால் குடும்பத்தில் கலகமும் பெண்டு பிள்ளைகள் அடங்காத அவல நிலையும் ஏற்பட ஏதுவுண்டு ஆயினும் ஆத்திரப்படாதே எதையும் ஆலோசித்து செய் இந்நிலை மாற இன்னும் முப்பத்தியோர் நாள் கழிய நலம் ஒரு கன்னி உன் இல்லத்தில் மடிந்திருக்கிறாள் அந்தப் பெண்ணை வாரத்திற்கு ஒருமுறை வணங்கி வர சிறிது சிறிதாக நன்மை ஏற்படும் இப்பொழுது நாடிய எண்ணம் சற்று தாமதமாக இருக்கும். சுபம் | மத்திபம்.

# 29-வது பாட்டு அந்திமல்லிகை

உண்மையில்லை பந்துவர்க்கம் துரோகம் செய்யும்
உதவிபெற்ற நண்பர்களால் நஷ்டமுண்டு
வன்மைபெற்ற பலவானை யானாலும் தான்
வெற்றியில்லை பலவிதத்தில் தோல்வி கண்டாய்
நன்மையென்று எத்தொழிலும் செய்திடாதே
நம்பிவரும் பெண்மணியால் நாசம் ஆகும்
உண்மையிது பொருள் நாசம் பகையும் உண்டு
உத்தமனே இதையறிந்து நடந்துக்கொள்.

உரை :—சாஸ்திரம் கேட்கவந்த சர்ஜனரே— சிறந்த நற்குணம் படைத்த உனது பந்து ஜனங்களே உனக்குப் பல தீங்குகளை செய்துவருகிறார்கள். உயிர்க்கினிய நண்பரென எண்ணியிருக்கும் ஒருவரால் உனக்குப் பல அபகீர்த்தியும் பொருள் நஷ்டமும் நல்லோர் பகையும் உண்டாவதற்கு காரணம் உன் கிரக பலன் சரியில்லாததே இச்சமயம் எத்தொழில் செய்யினும் நஷ்டமே பொருள் விரயமும் நீ யாருக்கு நன்மை செய்யினும் அவரால் விரோதமும் மனச் சோர்வும் ஏற்படுமே தவிர ஒருவித நற்பயனும் காணாது ஒரு பெண்ணினுடைய நட்பைப்பற்றி சதா சிந்துத்துக்கொண்டிருக்கும் அவரால் கெடுதல்களும் எதிர்ப்பும் ஊரார் பகையும் நவக்கிரகங்களை சுற்றி பிரதி சனிக்கிழமை தோறும் விரதமிருந்து வந்தால் இக்கிரகம் சீற்றம் சற்று சாந்தி யடையும் படிப்படியாக குறையும் திடச்சித்தத்தோடு தைரியமாகவும் அஞ்சாதே நெஞ்சத்துடன் இருந்து இந்த இக் கட்டான காலத்தைக் கடத்துவது நலம், சுபம் ! மத்திபம்.

# 30-வது பாட்டு ரோஜாப்பூ

கேளப்பா யினி உனக்கு இடையூரு இல்லை
கொற்றவனே ரோஜாப்பூ உதித்ததாலே
ஆளப்பா பகைத்தவர்கள் உறவதாச்சி
அடுக்கடுக்காய் வியாபாரம் விருத்தியாச்சி
கேளப்பா நோயினுடன் வருத்தமில்லை
கூறுகிறேன் உன்மனையில் புதையல் கிட்டும்
தேரப்பா நீ நினைத்தப் பெண்ணாலே
திரவிய லாபம் பெருகும் சிறப்புற்றோங்கும்

உரை :—கிரக ராசியை அறியவந்த அன்பரே—குதுகுல மான உமது ராசிபலன் மிக்க மேன்மை பெற்ற விதமாக அமைந்திருக்கிறது உன் தபோ பலத்தினால் தரித்திரமற்ற நிலையில் சுகபோகத்தோடு பல கலைகளையும் உணர்ந்து பந்துக் களாலும் சினேகிதர்களாலும் வேண்டிய உதவியை பெற்று ஒரு குறைவுமின்றி வாழ்வாய் வியாபாரத் துறையில் மேன் மையான லாபங்களை யடைந்து வருகிறாய் நீ உன் அன் புடன் நேசிக்கும் ஒரு பெண்ணினால் பல குழந்தைகளைப் பெற்று பகைவர்களின் தொல்லைகள் இன்றி நிம்மதியுடன் வெளியூரின் செய்திகளால் வேண்டிய நன்மையும் லாபமும் கிடைக்கும் பல நாட்களாக எண்ணிய எண்ணம் கைக் கூடுதலும் பெருமையும் அளிக்கும் அஞ்சாதே நாடிய எண் ணம் முடிவது திண்ணம் வாரத்திற்கு ஒருநாள் ஏழை களுக்கு அன்னமிட்டால் இன்னும் பலவித நன்மை அடை வாய். சுபம் ! உத்தமம்.

# 31-வது பாட்டு பூவரசு

ஓங்குமென்று நீ நினைத்து வந்ிடாதே
　　உற்றபொருள் நாசமடா பழியுண்டாகும்
தாங்கினவர் பகையாவார் தாரம் சாகும்
　　தரித்திரமோ அதிகமடா குலேநோயுண்டாம்
தியங்குமடா வரவுதொழில் விருத்தியில்லை
　　தெய்வத்தின் துணையுமில்லை வாழ்வுமில்லை
தீங்குபல செய்திடுவோர் சுற்றத்தார்கள்
　　தீருமடா தினம் ஏழுவாரம் ஆமே.

உரை :—கிரகநிலையை அறியவந்த குணவானே-கவலைக்கிடமான உனது ராசிபலன் காணமன வேதனை யடைகிறது குடும்பத்தில் பல கலகங்களும் பந்துக்களின் பிரிவினை ஏற்பட்டு மீளாத வறுமை நோயின் காரணமாக மனவேதனையின் கொடுமையால் உன் உடல் நோய் தொந்தரவு செய்ய உன் மனைவி மக்களாலும் வஞ்சக நெஞ்சங்கொண்ட உன் சுற்றத்தார்களாலும் ஒரு விதமான பயனும் இல்லை நீ எடுத்தக் காரியங்கள் எத்தனையோ வீணாயின உனது மனைவி தீராத நோயினால் அவதியுற்று இறக்க நேரிடும் அதுவுமல்லாமல் பொருள் நாசமடைந்து வருவதாலும் தொழில் நஷ்ட மேற்பட்டு தொல்லை ஏற்படுவதாலும் நீ மன உறுதியுடனும் நிதான புத்தியுடனும் நீ நடந்துக்கொள்வது நலம் இன்னும் 45 தினம் செல்ல உன் கிரகநிலை மாறும் அதன் பிறகு எடுத்த காரியம் வெற்றியாக முடியும், சுபம் ! மத்திபம்.

# 32-வது யாட்டு மாதுளம்பூ

எண்ணிபதோர் எண்ணமதில் இடையூரில்லை
இனியுனது வாழ்வினிலே கவலையில்லை
எண்ணிய தொழில்தனிலே நஷ்டமேது
கபடநெஞ்சம் உடையவர்கள் பகையுமில்லை
மண்ணிலே நோயுடனு தீங்குமில்லை
நண்ணிய மாதுளம்பூவு வந்ததாலே
நலமெனவே வால்மீகி நவின்றிட்டாரே.

உரை :—அதிர்ஷ்ட வசமுள்ள அன்பரே—சந்தோஷ கரமான உனது வாழ்க்கை மேன்மை பெற்றுவிளங்குகிறது ஆழ்ந்த யோசனையுடன் எந்த தொழிலும் செய்வதாலும் பெருந்தன்மையான குணமும் வாழ்க்கையும் குறித்த காலத்தில் எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் உன்னைக் கண்டு பொறுமை யற்றவர் உனது நண்பர்களாக மாறி வருவார் தெய்வபக்தியினுல் நீ தைரியமாக எடுத்ததை முடிக்கலாம் உன் உறுதியான குணத்தைக் கண்டு உன்னிடத்தில் நல்லோர்கள் வந்து உறவு கொள்வதும் அதனுல் வியாபார மேன்மையும் அடைவதும் தவிர நீ அதிர்ஷ்டவசமான ராசியைப் பெற்றிருப்பதினுல் உன் ஆயுள் முடியும் வரை உன் வாக்கு பலம் குன்ருது செல்வம் குறையாது சில தினங்களில் மனையோ வாகனமோ சொந்த நிலங்களோ கிடைக்கும் அதிலிருந்து உன் வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றிக் கண்டு பந்துஜன சேர்க்கையும் புத்திரர்களால் மேன்மையும் குபேரனைப் போன்ற வாழ்க்கையும் உண்டாகும் ஆனுலும் சனிபுத்தி ஏற்பட மூன்றுமாத மிருப்பதால் நீ ஜாக்கிரதையாக நடப்பது நலம், சுபம்! உத்தமம்,

# 33-வது பாட்டு கொன்றைப்பூ

நலின்றிடவே சுகமில்லை உனது வாழ்வில்
நல்லபலன் யில்லை யடா பொருளே நஷ்டம்
மயங்கிடவே பேய்பில்லி சூன்யங்கள்
மன்னவனே இல்லமது பாழாய்போகும்
இசைந்ததொரு பெண்ணாலே இடறு நேரும்
கசந்துதடா உன்வாக்கு பொய்யாய்போகும்
கண்மணியே கொன்றைமலர் வந்ததாலே.

உரை :—கிரக ராசியை பார்க்கவந்த கணவானே — உனது வாழ்க்கையில் நீ படும் வேதனை நிறைந்த கஷ்டங்கள் இவ்வளவென்று அளவிட்டு சொல்ல முடியாது நீ மானம் போய் உயிர் வாழ்வதாயென்று நீ தைரியமாக வறுமையை பாராமல் வாழ்ந்தும் பயன்படவில்லை உன் கிரங்களின் கொடுமை அதிகரிப்பதின் காரணமாக நம்பிக்கை நாணயம் தெய்வபக்தி எல்லாம் குறைந்து மனவேதனை யடைந்து வரும் நீ எத்தொழிலிலும் லாபம் காணுவிடினும் நஷ்டம் தான் அதிகம் ஏற்படும் இழிவானத் தொழில் எதையும் துணிந்து செய்ய உன்மனம் இடம் தரும் துரதிஷ்டமான உன் நிலை மாற இன்னும் 7 மாதமிருக்கிறது அதனல் நீ தெய்வ வழிபாடு செய்துவந்தால் உன் கஷ்டம் நீங்கி தொழிலில் வெற்றியுள்ள லாப ஸ்தானமும் புதிய சினேகிதர் உறவினுல் பலவித நன்மையும் சீரான குடும்ப வாழ்க்கையும் நாணயமான குணமும் ஏற்படும், சுபம் ! மத்திபம்.

# 34-வது பாட்டு பவழமல்லி

வந்தவினை தீருமடா உத்தமன் வாழ்வில்
உன் பவழமல்லி மலர் வந்ததாலே
சொந்தமனை தனியிலோர் புதையல் கிட்டும்
சுந்திரனே பால்பசுவும் விருத்தியாகும்
கந்தனுட கிருபையடா உனகேயுண்டு
கடன்யில்லை கஷ்டமில்லை கெண்டமில்லை
மைந்தர்மனை வாழ்வு சுகம் மிகவுண்டாகும்
மன்னவனே என்வாக்கை நம்பிடாயே.

உரை :—ராஜயோகத்தில் சிறந்தவரே — உனக்கு கடவுளின் கருணை அளவற்று நிறைந்து யிருப்பதால் நிலையான செல்வத்தின் சிறப்பில் மகிழ்ந்துசந்தோஷகரமான|வாழ்க்கை வாழ்ந்து வருகின்றாய் காலமெல்லாம் உன்னைப் பகைவர்கள் உன்னை வணங்கி உனக்கு நன்மை செய்ய நாடுவார் பால் பசு வாங்குதல் கிணறு வீடு கட்டுதல் புதியதாக ஓர் தொழில்செய்து அதிலிருந்து லாபங்களும் புதிய விதமான பொருள்கள் கிடைப்பதும் பெரியோர்களின் நேசமும் சொந்த பந்துக்களில் ஓர் மங்கள காரியம் செய்து முடிப்பதும் புத்திரவுற்பத்தி புதுமனை புகுதல் மற்றும் வேண்டிய நன்மைகள் யடைய அம்ஸமுண்டு நீ செய்ய நாடும் எத்தொழிலும் லாபம் பெறுவதோடன்றி மேன்மையுற்று திட ஆரோக்கியத்துடன் சுகபோகத்தில் ஆனந்தமாக உன் எதிர் காலம் அமைந்திருக்கிறது ஏழை எளியோர்களிடம் அன்பும் இறக்கமும் காட்டுவதோடன்றி தெய்வபக்தியும் ஞானமும் தெளிவுற்ற உள்ளத்துடன் நடந்துகொள்வாயாக. சுபம்! உத்தமம்.

# 35-வது பாட்டு வேப்பன் பூவு

உண்டென்று நினையாதே மைந்தா கேளு
உன்னுடைய உடல்தனிலே நோயுண்டாகும்
பண்டுசெய்த வினையதனால் தத்தமூளும்
பலவிதமாய் செலவினங்கள் வந்துகூடும்
தொண்டுசெய்தோர் உன்னைக்கண்டு நகையே செய்வார்
தோல்வியடா கன்னியினால் களவேபோகும்
தண்டனைகள் மூளுமடா தரணிமீது
தன்மையதாய் வால்மீகி புகலுகின்றேனே

உரை :—சாஸ்திரம் கேட்கவந்த உத்தமனே — கவலைக் கொண்ட உன் நெஞ்சம் கலங்கி அன்பும் ஆதரவும் யில்லாமல் வாடும் நிலையில்தான் இன்னும் உன் கிரக அமைப்பு யிருக்கிறது நீ உதவிசெய்த நண்பர்களால் பலவித இடையூறுகளை அடைந்து மனவேதனையும் தீராத வறுமையும் அடைந்திருக்கிறாய் உன்னிடம் ஏவல்செய்து பல தீங்கு செய்ய இன்னும் பல துஷ்டர்கள் காத்திருக்கின்றனர் உண்டுகளித்து உறவாடும் ஒரு பெண்மணியினால் உன் வீட்டில் களவு போகும் வறுமை நோயின் காரணமாக 5—மாதங்கள் சென்றால் நலம் உண்டாகும் நீஎத்தொழிலில் செய்தாலும் முன் எச்சரிக்கையுடனும் நன்கு ஆலோசித்தும் ஜாக்கிரதையுடனும் தெளிவான நம்பிக்கையோடும் செய்து வர நலம் உண்டாகும் மூன்று வாரம் செவ்வாயன்று விரதமிருப்பது நலம். சுபம் ! மத்திபம்,

# 36-வது பாட்டு செங்கழுநீர்பூ

அரிதாகும் தொழில்கள் அனைத்தும் நாசம்
அடிமைகொண்ட பெண்டிரால் துன்பம் நேரும்
கருதினதோர் விவாகமது கைகூடாது
கனத்ததொரு பெருத்தக்குடி அழிதலாகும்
நிறுதியிலோர் பகையாளி உனக்கேயுண்டு
நிந்தனைகள் அவராலே அனேகமுண்டே
கரிதியுந்தன் கன்மவினை ஒழிந்தே போகும்
கணபதியை வணங்கி நீ தினம் துதிப்பாயே.

உரை :—நற்பலனை நாடிவந்த நண்பரே—நீண்ட நாள்களாக தீராத மனவேதனையில் சிக்கி அலைமோதும் உமது வாழ்க்கையில் இன்னும் பல இடையூறு அனுபவிக்கவேண்டிய நிலையே உளது உன் சீறிய குணத்தின் மேன்மை யறியாத உன் அடிமையாயிருந்த சிலர் உனக்குதீங்கு நினைக்க முயற்சித்து வருகிறாகள் நீ வெகு நாளாக கோரிவரும் திருமணக்காரியம் கூடி வராது இன்னும் தடைபட்டிருக்கிறது செய்யும் தொழிலில் அளவற்ற நஷ்டமும் மன கஷ்டமும் ஏற்படும் உன் குடும்பமே அழியக்கூடும் உன் இல்லத்தில் நிருதி திசையில் அநேக தீங்கு இழைக்கக்கூடிய பகை எண்ணம் படைத்த ஒருவன் உன் உறவினனாக யிருப்பதால் அவனிடத்தில் உண்மையான நம்பிக்கை வைக்காமல் நிதானத்தோடு நடந்துக்கொள்வது நலம் உமக்கு உற்ற இக் கஷ்ட நிலைமாறி சுகம் பெறவும் மேன்மையான செல்வாக்குடன் சிறப்புற்று வாழவும் மனோதைரியம் ஏற்படவும் நீ கணபதிக்கு பூஜை போட்டும் அவரை ஒரு மண்டலம்சுற்றி தீபம் போட்டுவந்தால் உனக்கிருக்கும் எல்லாவித தொல்லைகளும் விலகி அஷ்ட அய்ஸ்வரத்துடன் வாழ்வாய் எதற்கும், அஞ்சாதே பந்து ஜனத்தோடு வாழ்வாய். சுபம்! மத்திபம்

# 37-வது பாட்டு தவனம்

உண்டென்று உனக்கீடு ஆர்தானப்பா
உண்மையுடன் எடுத்ததெல்லாம் நடந்தே தீரும்
பண்டுண்டு பலனுண்டு பாக்கியமுண்டு
பரிநயமும் பால்பசுவும் விருத்தியுண்டு
தொண்டுபுரிய ஏவலுண்டு துணையுமுண்டு
துஷ்டருட வஞ்சனைகள் தொலைந்துபோகும்
அண்டையிலோர் பொருள் கிடைககும்
அருளுண்டாகும் அப்பனே தவனமது உதித்ததாலே

உரை :—எதிர்காலத்தை அறிய வந்தவரே—மகிழ்ச்சி யோடுக் கூடிய உமது ராசி நிலை மிக்க மேன்மை பெற்று விளங்குகிறது நீ அடையப்போகும் வெற்றியைக் கண்டு ஆனந்தம் அடைய உன் மனைவி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் நோயற்ற வாழ்க்கையும் சீரும் சிறப் பும் பெற்று பந்துஜன உறவுடன் வாழவும் அவைகளைக் கண்டு மகிழவும் உன் உல்லாச வாழ்க்கையில் நீ தழைத்து ஓங்கும் உனக்கு எதிர்காலம் மிக நன்மை பயக்கக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது புதிய சினேகிதர்களால் நல்ல பொருள் சேர்க்கையும் புதுமனைக் கோலுதலும் பால் பசு வாங்குதலும் நல்ல குழந்தைகளை பெற்று வாழும் நீ உன் குடும்பத்தில் ஓர் திருமணம் நல்ல முறையில் கூடுதலும் அதன் காரணமாக நீ நிஉயான செல்வத்தோடும் புகழோடும் வாழ்வாய் கடவுளை மறவாதே எங்கும் அஞ்சாதே நெஞ்சத் துடன் செல். சுபம் ! உத்தமம்.

# 38-வது பாட்டு மரமல்லிகை

அருளுண்டு பொருளுண்டு இன்பமுண்டு
அணைத்ததொரு மனைவிமக்கள் சுகமுண்டு
பொருளுண்டு பகைவர்களும் நாசமாவார்
பொங்குமடா கல்வியுடன் செல்வம் ஓங்கும்
அழித்ததொரு பொருள்போல அனேகம் சேரும்
ஆயுளடா வுந்தனுக்கு அனேகமுண்டு
வழிதப்பி போனமைந்தன் வந்துசேர்வான்
வல்லமையாம் பெண் ஒன்று பிறக்கும் தானே,

**உ**ரை :—யோகபாவத்தை அறிய வந்தவரே—அளவற்ற பக்தியும் ஆண்டவனின் கருணையும் உனக்கு நிறைந்திருக கின்றது அதனால் எதிலும் வெற்றிமேல் வெற்றி யடைந்து வருகின்றாய் தடையற்ற லாபங்களையும் பெற்று மிக்க மேன் மையான செல்வாக்கு நிறைந்து பெரியவர்களின் அன்பும் பந்துஜன சேர்க்கையும் நீண்ட ஆயுளையும் நல்ல அறிவான பிள்ளைகளின் மனமகிழ்ச்சியும் பெற்று வாழும் உனக்கு எவ்விதத்திலும் ஆண்டவனின்குறையில்லாமல் வைத்திருக்கி றார் நெடுநாட்களாக உன் உயிர்க்குயிரான நண்பன் உன்னை விட்டுப் பிரிந்துபோய்விட்டார் என்று நீ மிக வருத்தம் அடைந்ததின் காரணத்தை ஆண்டவன் திரும்பவும் அவர் உதவி உனக்கு கிடைக்கும்படி செய்துவிட்டார் ஏற்கனவே அழிந்துபோன பொருள் திரும்ப பத்துமடங்கு கிடைக்கும் படி உன் கிரகங்கள் சரியான நிலையில் யிருக்கிறது பயம் வேண்டாம் பெரியோர்களின் சகவாசமும் அவர்களால் மேன்மையும் விரோதிகள் சூழ்ச்சியினால் அகப்பட்டு வேதனைபட்ட நீ தற்சமயம் அவர்களாலே நன்மையடையக் கூடிய பலன் உனக்கு ஏற்பட்டிருக்கிறது எதற்கும் நீ உன் வாழ்வை நம்பி ஏமாந்து விடாமல் பொறுமையுடனும் தீய குணங்களை விட்டும் அதிக தானதர்மங்களை செய்தும் கட வுள் வழிபாடுடன் வாழ்ந்துவந்தால் உனக்கு மேன்மேலும் தொழில் விருத்தியும் குறையாத செல்வமும் நீண்ட ஆயுளும் உனக்கு உண்டாகும், சுபம் ! உத்தமம்,

# 39-வது பாட்டு செவ்வளிப்பூ

தானப்பா வருடம்வரை கஷ்டமுண்டு
தவருது எடுத்த தொழில் வீணய்போகும்
கோணப்பா சினேகிதர்கள் பகையுமுண்டு
கொற்றவனே கைப்பொருளும் விரையமாகும்
தேனப்பா மனையாட்டி சோரம்போவாள்
தெளிந்திடவே பலபேர்கள் நிந்தனையுண்டு
ஆமப்பா தேவியுட பூஜை செய்வாய்
அப்பனே கெண்டம் உனக்கதிகம் உண்டு.

உரை :—ஆருடம் கேட்க ஆவல் கொண்டவரே — உனது ராசி இன்னும் ஒரு வருடம்வரை கவலைக்கிடமானதும் மனவேதனைத் தருவதும் வீணான அலைச்சல் பண விரையம் வரவுக்கு மிஞ்சின செலவும் கடன்காரர் தொல்லையும் கஷ்டத்தின் மிகுதியால் புத்தி தடுமாற்றம் அளவுக்கு மிஞ்சிய வறுமை மிகுதியால் கொண்ட மனைவியும் பிரிந்து சோரம் போக நேரிடுவதும் துன்பத்தின்மேல் துன்பம் ஏற்பட்டு வருவதால் நீ தாங்கமுடியாததால் பல இழிவானத் தொழில்களை செய்து அதனல் ஊரார் பலவிதமாக கேவலமான நிலையில் நிந்திக்கவும் ஏதுவாகும் இந்நிலை எப்பொழுது மாறும் மன நிம்மதியோடுக் கூடிய வாழ்வு நீ வருந்துகிருய் கவலைப்படாதே இன்னும் 40 தினங்கள் சென்ருல் உனது இரக நிலை மாறி சிறுக சிறுக செய் தொழில் விருத்தியும் பண வருவாயும் உடல் பிணி நீங்குதலும் பந்துக்களால் உதவியும் குழந்தைகள் படிப்பும் உத்தியோக உயர்வும் படிப்படியாக உண்டாகும் தெளிவான நெஞ்சத்தோடு விடாமுயற்சியுடன் ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடு முருகன் திருவருள் உனக்குக் கிடைக்கும் 9 தினங்கள் நவக்கிரகத்தைச் சுற்றி தீபம் போட்டு வரவும். சுபம் ! மத்திபம்.

# 40-வது பாட்டு எருக்கம்பூ

உண்டப்பா செய்தொழிலில் மேன்மையுண்டு
உத்தமனே பந்துஜன வுறவுமுண்டு
பண்டப்பா செய்தவினை நீங்கிப்போச்சி
பலபேர்கள் உதவியுனக்கு கிடைக்கலாச்சி
அண்டப்பா அடுத்தவர்கள் பகையும்போச்சி
ஆனதொரு கைப்பொருளும் கூடுதலாச்சி
கண்டப்பா உனதுபுகழ் ஓங்கலாச்சி
கண்மணியே வால்மீகி புகன்றிட்டேனே.

உரை :—கிரகபலனைக் கேட்கவந்த புண்யவானே — கடவுளின் கருணையால் மேன்மையை பெற்ற செல்வமும் கபடமற்ற உள்ளமும் கனம் பொருந்திய புத்திமான் களுடைய சேர்க்கையும் திறமையோடு எக்காரியத்தோடு முடிக்கும் முன் யோசனையும் ஆர்வமும் அபாயமென்றவரை ஆதரிக்கும் குணமும் உனக்கதிர்ஷ்ட வசமாக அமைந் திருக்கிறது தற்சமயம் உன்ராசி நிலை நல்ல நிலையில் சிறப் புற்று விளங்குகிறது வியாபார விருத்தியும் பொருள் வருவா யும் பகையாளர் உறவும் பிரிந்தவர் கூடுதலும் பெரியோர் களால் உதவியும் நல்ல நண்பர்களின் சேர்க்கையும் பசு பால் விருத்தியும் நல்ல புத்திரர்கள் நல்ல உதவி இவற்றோடு புதிய ஒரு இடம் வாங்க அம்சமுண்டு அதனுல் பலமான மேன்மை யும் செல்வாக்கும் புகழும் பெரியோர்களின் நட்பும் ஓங்கும் இருந்தாலும் நீ வாரம் ஒருமுறை ஏழைகளுக்கு அன்னமிடு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து நீ ஆண்ட வனை வழிப்பட்டு வருவதை சற்றேனும் மறக்கக்கூடாது சுபம் ! உத்தமம்.

# 41-வது பாட்டு சம்பங்கிப்பூ

புகன்றிட்டேன் உனக்கு ஒரு வருடமாக
புண்ணியனே கைப்பொருளும் விரையமாச்சி
அகன்றிட்டேன் மனைவிமக்கள் பிரிந்துபோச்சி
அனியாயம் உன்குடும்பம் அழிந்துபோகும்
திகைக்கின்ற உனக்கு ஒரு வழிதானுண்டு
திருமடா உன்வினையும் மகிழ்வுண்டாகும்
தகன்றிட்டேன் தேவியுட பூசைசெய்வாய்
தன்யனே அருளோடு பொருளுண்டாகும்.

உரை :—யோகபாவத்தை அறிய ஆவல் உள்ளவரே—உன்னை ஆண்டவன் கருணையற்ற முறையில் சோதிக்கிறான் வசிக்கட வேதனைடைந்த உன் கிரக நிலைகள் நல்ல நிலையில் யில்லை நீ எதிர்பார்க்கும் ஒவ்வொருக் காரியமும் வீண் அலைச் சலாகவும் பொருள் நஷ்டமாகவும் மனவேதனைக் கொடுக்கக் கூடிய நிலையாக யிருக்கிறதே யன்றி ஒருவித நற்பயனும் ஏற்பட ஏதுவல்லளாமல் இருக்கிறது உன் நண்பர்களாலும் கொண்ட மனைவியாலும் பெற்றக் குழந்தைகளாலும் ஒரு விதப் பயனும் இல்லாததும் தவிர அனேக தோல்வியும் வியாதி வறுமை இவைகளால் அவஸ்தியுற்றும் உனக்கு இன்னும் மூன்று மாதம் போகவேண்டும் அதன்பின் உன் நிலைகள் கொஞ்சம் மாறுதல் அடையும் பிரதி செவ்வாய்க்கிழமைதோறும் விரதமிருந்து துர்க்கைக்கு அர்ச்சனை செய்துவரவும் அஞ்சாதே, சுபம் / மத்திபம்.

# 42-வது பாட்டு வெள்ளை ரோஜா

உதவியுண்டு உற்றவர்கள் நேசமுண்டு
உண்மைபல நினைத்தவினை முடியும்பாரு
பதவியுண்டு பலனுண்டு பொருளே சேரும்
பரிணயமும் பால்பசுவும் அநேகம் சேரும்
இதமுண்டு நிலபலமும் கிடைக்கும் பாரு
இணத்தினரும் குணத்தினரும் உதவியுண்டு
பதமுண்டு செய்த்தொழிலில் லாபமுண்டு
பதராதே கணபதியை பூஜைசெய்ய

உரை :—சாஸ்திரம் கேட்கவந்த அன்பரே—உன்கிரக பாவம் உனக்கு சரியானபடி பொருந்தி யிருப்பதின் காரண மாக நீ எடுத்த எந்தக் காரியமும் வெற்றிகரமாக முடியும் உனக்கு பெரிய வேலைகள் கிடைத்து அதன் மூலமாக உனக்கு பல பெரியோர்களின் ஆதரவும் கிட்டும் செல்வம் செழிக்கும் நிலங்கள் வாங்குதலிலும் புதுமனைக் கட்டுதலும் முன்னோர்களினால் தேடிவைத்தப் பொருள்களும் உன் ராசிக்கு கிட்டும் பந்துவர்க்கத்தாரால் உனக்கு மேன்மையும் உதவியும் கிடைக்கும் நீ பரோபகார சிந்தனை உள்ள எண் ணம் யிருப்பதினால் எவ்வித யிடையூர்கள் உனக்கு எதிரியி னால் நேர்ந்தாலும் அவைகள் உன்னைப் பாதிக்காது அஞ்ச வேண்டாம் எதையும் நீ துணிந்து செய்யலாம் பசு விருத்தி யும் நல்ல புத்திரர் பெறுதலும் முன்னோர்களால் குடும்பத் தில் அமைதி ஏற்பட்டு பேரானந்தம் அடையும் பாக்கியமும் எப்பொழுதும் சிறிதேனும் குறைய யிடமில்லை ஆனாலும் நீ நண்பர்களிடம் நெருங்கி பழகாதே மறைமுகமாக சூது நடத்தி உன் வாழ்வை கெடுக்கக்கூடிய நண்பர்கள் சிலா நெருங்குவார்கள் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் கண பதியை பூஜித்து திருவிளக்கேற்றி வணங்கிவந்தால் மேன் மேலும் செல்வம் செழித்து ஓங்குதலும் தொழில் மேன்மை யும் வாக்கு சித்தியும் உண்டாகும் ஏழைகளுக்கு அன்னமிடு வதை மறக்காதே அஞ்சாதே தைரியமாய் இரு. சுபம்! உத்தமம்,

# 43-வது பாட்டு சப்பாத்திப்பூ

செய்யப்பா அஷ்டமத்தில் சனியே நின்றான்
சண்டையுடன் சச்சரவு அதிகம் ஆகும்
பொய்யப்பா நினைத்ததெல்லாம் வீணாய்ப்போகும்
பொன்பொருளும் சேதமடா நஷ்டம் ஆகும்
வையப்பா மனைவிமக்கள் வியாதிபீடை
வருத்தமடா பலபேர்கள் பகையுண்டாகும்
ஐயப்பா வாரமது ஏழுபோக
வண்மையாக நன்மையது வருகும் பாரே.

உரை :—கிரக நிலையைக் காணவந்த அறிஞரே — உனக்கு தற்சமயம் சனிதிசை நடப்பதால் நீ எக்காரியத்தில் ஈடுபட்டாலும் சற்று யோசித்து நடப்பதுதான் நல்லது அவசரப்பட்டு நட க நேரிட்டாலும் உன் நிதான புத்தியினால் தாமதப்படுத்திக்கொள்வதுதான் வருங்காலத்திற்கு நற்பலனை அளிக்கும் நீ வெகுநாளாய் ஜீவனையோ ஒரு பொருளையோ நீ நினைத்திருக்கிறாய் அது உன்னை நாடிவர இன்னும் $1\frac{1}{2}$ வருஷமாகும் கவலைப்படாதே நீ யாரிடத்தில் உண்மையாகப் பேசி நடந்தாலும் அவர்கள் உன்னைக் காணும்போதெல்லாம் அபாண்டமான வார்த்தைகளையும் எவ்விதத்திலும் உன்னை வம்புக்கிழுத்து உன் மனம் புண் படும் நிலைக்கு தொந்தரவுக்கொடுக்கும் நயவஞ்சகக் கூட்டத்தை நம்பி எதையும் செய்யாதே நீ வியாதியினால் வெகு நாளாய் அவஸ்தைப்படுகிறாய் அது தீர எத்தனித்து எவ்வித ஔஷதம் சாப்பிட்டாலும் தற்சமயம் பயனளிக்காது நீ நாம் எப்படி வாழ்வோம் எத்தொழிலில் ஈடுபட்டாலும் லாபம் கிடைக்கும் உற்றோர் வுறவினர் பிரிய சினேகிதர் இவர்களால் நமக்கு நண்மையுண்டாகும் இல்லை இப்படியேதான் நம் காலம் வீணாகுமா என்று உன்மனம் புண்படுகிறது அஞ்சாதே திடகாத்ரீயம் உண்டாகும் மனைவி மக்களாலும் நம்பியவர்களின் உதவியாலும் உனக்கு மேன்மேலும் பொருள் வரவும் சுகபோகமும் நிறந்தரமான தொழில் விருத்தியும் உண்டாகும் பயப்படாதே, சுபம்! மத்திபம்,

# 44-வது பீட்டு வெண்சாமந்தி

பெற்றதொரு பிள்ளையினால் பேயனுனாய்
பேருபெற்ற உனது புகழ் வாழுதாச்சி
நற்றவமே செய்திடினும் நலனேயில்லை
நன்மைபெற்ற உறவினர்கள் பகையே ஆச்சி
கற்றவர்கள் உன்னைக்கண்டு ஏசலாச்சி
கருணையின்றி சூதுபல செய்யலாச்சி
சுற்றமென்று நீ நம்பி துணைபோகாதே
சூழ்ச்சியடா அத்தனையும் நேரும்தானே.

உரை :—யோகபாவத்தை யறியவந்த புத்திமானே — உமது பலாபலன்கள் தற்சமயம் ஒன்றும் பலன் அளிக்கக் கூடியதாக யில்லையே என்று நீர் மிக மனவருத்தம் படுகிறாய் பரவாயில்லை நீ உன் சொந்தமான நண்பர்களையோ அன்பான உறைமுறையாரையோ நம்பி எத்தொழிலும் ஈடுபடாம லிருப்பது நலம் நீ கூர்மையான புத்தியுடனும் சத்தியவாக் குடனும் தர்ம சிந்தையுடனும் நடந்தாலும் உன் கிரக நிலை யின் கோலான் அவர்கள் உன்னை படுகுழியில் தள்ளி நகைக் கும்படி செய்ய முற்படுவார் பெரிய மனிதர்களின் ஆதர வுக்கிருந்தும் பயனில்லாமல் இருக்கிறது அதைக் கண்டு மிக வும் துன்புருகிறாய் கல்வித்திறமை உள்ளவர்கள் கூட உன் னைக் கண்டு பேச அச்சப்படும் நிலையில் இருந்த நீ அவ்வளவு சக்தியும் ஆர்வமும் கவிதாதன்மையும் குன்றி உன் பெற்ற பிள்ளைகள் கூட உன்னை யமனாக நினைத்துப் பகையாடுவதை பார்த்து உன் மனம் தற்கொலை புரியலாமென்று சிந்திக்கிறாய் அஞ்சாதே உன் குலதெய்வத்திற்கு பூஜை போட்டும் நவக் கிரகத்தை யிடைவிடாது 1-மண்டலம் வணங்கியும் பிரதி சோமவாரம் விரதமிருந்தும் ஏழைக்கு அன்னமிட்டு வந்தால் சற்றேறக்குறைய உன் கிரக நிலையின் துர்ப்பலன் குறைந்து நற்பலன் அடையலாம் கவலைப்படாதே. சுபம்! மத்திபம்.

# 45-வது பாட்டு ஜாதிமல்லி

ஆச்சுதடா வேலனுட துணையுண்டாச்சி
அருமையென்ற பிள்ளைகளால் குணமுண்டாச்சி
மூச்சுநின்று போனதொரு கன்னியாலே
முடிந்ததடா உனககுப்பல நலனுண்டாச்சி
வச்சுதடா நீ நினைத்தக் காரியங்கள்
வரிசையுடன் முடிந்ததடா பொருளுண்டாச்சி
நீச்சருட உறவெல்லாம் விட்டுப்போச்சி
நினைத்ததடா முன்னோர்கள் மனையும்தானே.

உரை :—யோகதிசையைப் பார்ப்பவரே — கடவுளின் கருணையினால் களிப்புறும் செல்வாக்கும் சிறப்போடுக் கூடிய சிநேகிதர்களின் உறவும் அறிவில் சிறந்த பெரியோர்களின் நேசமும் கிடைக்கப்பெற்று மனோகரமான சுகவாழ்க்கை நடத்தி வருகிறாய் உனக்கு சிறந்த குழந்தைகளின் மேன்மையும் நல்ல மனைவியின் சேவையும் கிடைத்திருக்கிறது நீ செய்யும் ஒவ்வொருதொழிலும் சிறப்போடு வளர்ச்சிப்பெற்று அளவற்றலாபத்தையும் புகழையும் தருகிறது உனக்குப் பகையான நேசத்தை விலக்கு உன் வீட்டில் இறந்துபோன ஓர் கன்னித்தெய்வம் உனக்குத் துணையாக இருந்து சகல காரியத்தையும் நடத்திவைக்கிறாள் பிரதி வெள்ளிகிழமைதோறும் விரதமிருந்து அப்பாவைக்கு ஓர் பூஜை செய்துவரின் மேன்மேலும் குடும்ப விர்த்தியும் தனசேர்க்கையும் வியாதியற்ற உடல் நலமும் குழந்தைகள் படிப்பும் பசு விருத்தியும் எடுத்த காரியங்கள் வெற்றியும் பெற்று எட்டு திக்கும் உன் புகழ் ஓங்க வளர்ச்சியடைவதைக் காண்பாய் அஞ்சாதே. சுபம் ! உத்தமம்.

# 46-வது பாட்டு மஞ்சல் ரோஜா

தானென்ற மமதையினால் அழிவுண்டாச்சி
தரணிதனில் பகையுடனே பொருளேபோச்சி
நானென்ற வஞ்சனையால் கெடுத்தாரப்பா
நலன் அற்று பலனற்று வருமைகண்டாய்
கோனென்ற குறமாது இடத்தமர்ந்த
குமரனடி வணங்கிடுவாய் இடரு தீரும்
மானின்ற தீவினைகள் அற்று நீயும்
மனமகிழ நன்மையது கிட்டும்பாரே

உரை:—சோதிடம் கேட்கவந்தவரே —மனச்சஞ்சதலை தோடுக்கூடிய உன்முக வாட்டமே உன்னுடைய கிரகநிலை சரியில்லையெனக்காட்டுகிறது உன் அருமையான வாழ்க்கை தானென்ற மமதையினால் கெடுத்துக்கொண்டாய் உன் சீரிய குணமும் தேர்ந்தக்கல்வியும் திறமையோடு செயலாற்றும் முறையும் ஒளிகுன்றி இருட்டறையில் எரியும் எண்ணெயற்ற விளக்கொளிபோல் இருக்கிறது நண்பர்கள் என்றுநீ நினைப்பவர்களை உனக்கு நயவஞ்சகமாக பல சூழ்ச்சிகளை செய்து பொருள் நஷ்டம் உண்டாக்கி வருகிறார்கள் அளவற்ற மன வேதனையுறும் நீ முருகப்பெருமானைநாடி துதித்துபக்தியோடு வணங்கினால் உனக்குற்ற இன்னல்கள் நீங்கி படிப்படியாக உயர்நிலை பெறுவாய் நண்பர்களால் உதவி கிடைக்க இன்னும் ஒருமாதம் போகவேண்டும் பலசிக்களிலிருந்து விடுபட்டு வறுமை நீங்கி மேன்மைபெறவும் பொருள் வருவாய்யற்று வியாபாரம் விருத்தியடையும் மனைவிமக்கள் வியாதியென்று சுகமான வாழ்வுபெறவும் கடன்தொல்லை நீங்கி மனசந்தோஷமடையவும் நீ குமரனை சரன் அடைவாய் அஞ்சாதே சுபம் ! மத்திபம்.

# 47-வது பாட்டு குருவேர்

கிட்டிடவே உனக்குப் பலர் உதவியுண்டு
கண்டமென்ற வினைபோச்சி கவலைபோச்சி
தொட்டிடவே தொழில்முறைகள் நடக்கலாச்சி
துணையென்ற அன்பர்களால் நலனுண்டாச்சி
விட்டிடவே கொடுத்தப்பொருள் வருகளாச்சி
வல்லவனே பெரியோர்கள் நேசமாச்சி
மட்டியென்ற பேர்போச்சி நலனுண்டாச்சி
மைந்தனே கணபதியை போற்றிடாயே

உரை :—கிரக ராசியை எண்ணென்று கேட்பவரே—நீ கோறும் ஒவ்வொரு காரியமும் தடையற்று மேன்மையாகவும் வெற்றியோடும் முடிகிறது உனக்கு பல பெரியோர்களின் உதவியும் உள்ளன்பு பெற்ற செல்வந்தர்களுடைய சேர்க்கையும் அடைந்திருக்கிருய் ஆண்டவன் திருவருளால் உனக்கு உற்ற கண்டம் நீங்கி திட ஆரோக்கியத்துடன் சுகம் பெற்று வருகிருய் நல்ல மனைவியின் சேர்க்கைகிடைக்கப்பெற்று குழந்தைகள் நன்மக்களாக அமைந்திருப்பதால் எவ்வித குறைபாடின்றி எடுத்தகாரியங்கள் வெற்றியோடு முடிக்கிருய் தொழில் மேன்மைபெற்று அதிகலாபஸ்தானத்தை அடையக்கூடிய விரிவானக் கூட்டுத்தொழில் ஒன்று உனக்கு அமையும் அதனால் நல்லப்பொருள் சேர்க்கையும் அறிவாளிகளின் சிநேகமும் புதுமனை வாங்குதலும் புகழோடுக்கூடிய வாழ்வு உனக்கு அமையப் பெற்றிருப்பாய் யிருப்பினும் பிரதி சனிக்கிழமைதோறும் விரதமிருந்து கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டால் இன்னும் பல அறிய நன்மைகள் அடைவாய் அஞ்சாதே சுபம் உத்தமம்!

# 48-வது பாட்டு அழவணப்பூ

வாழ்வுண்டு உனக்குப்பல நன்மையுண்டு
வழியுண்டு நலனுண்டு பெமையுண்டு
பாலுண்டு பசுவுண்டு பழையநண்பர்
தகையற்று பெரியோர்கள் நேசமுண்டு
தாளுண்ட தொண்டர்களின் சேணயுண்டு
தனசேர்க்கை வீடுமனை புதிதாய் வுண்டு
ஆலுண்ட கண்டருட கருணையாலே
அப்பனே உனக்குபல நண்மையுண்டே

உரை :—யோகபாவத்தை அறியவந்தவரே—எனது பிறவியிலேயே நல்ல யோகதிசையும் செல்வாக்கும் பல பெரியோர்களின் சேர்க்கையும் பெற்று அளவற்ற ஆனந்தத்தோடு நிகரற்ற வாழ்க்கை நடத்திவருகிருய்நோயற்ற வாழ்க்கையும் குறைவற்ற செல்வமும் மாடுமனை தோட்டம் நிலம் வாகனம் இவைகளோடுக்கூடிய செல்வத்தைப்பெற்றிருக்கும் உனக்கு பூர்வ புண்ய வசத்தால் மேலும் பல நன்மைகளே நடக்கப்போகிறது தவைத்தவர்களுடைய சேர்க்கையும் உயர்ந்த ஞானிகளின் தெரிசனம் நீ ஈடுபட்டிருக்கும் தொழிலில் ஒன்றுக்கு பத்துமடங்கான லாபமும் உன்னை வஞ்சித்த பகைவர்கள் உன்னை வந்து வணங்குவார்கள் நேர்மையும் வெகுநாளைக்குமுன் உன்னை விட்டு பிரிந்த பந்துக்களின் வரவும் இன்னும் பல அறிய நன்மைகள் கிடைக்கும் நீ பிரதி குருவாரம் விரதமிருந்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்துவரின் இன்னும் பல நன்மைகள் கிடைக்கும் தவறவிடாதே உறுதியான பக்தியுடன் நடந்துக்கொள் அஞ்சாதே! உத்தமம்.

# 49வது பாட்டு கொங்குமல்லி

உண்டெனநினைத்துமனம் மகிழ்ந்திடாதே
உற்றத்தொழில் நஷ்டமடா பகையுண்டாச்சி
பண்டமுதல் அழியுமடா தீய்யால்நீரால்
பகைவட வஞ்சனைகள் அனேகமுண்டு
வண்டருட நேசமடா வைத்திடாதே
வடிவேலன் பாதமதை மறந்திடாதே
பெண்டிரால் இன்னும்பல தீங்குண்டாதே
பேறுபெற மூன்றுதிங்கள் போகநன்றே

உரை :— ஆரூட பலனையறிய வந்த கன்யவானே— பட்டிருக்கும் கிரகநிலைக் கோட்பாட்டினுல் சிலகாலத்திற்கு பொறுமையுடன் எதையும் செய்யாமலிருப்பது நலம் தீய்யின் காரணத்தாலும் வெள்ளப் பெருக்கினுலும் உன் பொருள் அழிய நேரிடும் உனக்கு எதிரிகளின் சூழ்ச்சியால் நீ பலசிக்கலில் அகப்பட்டு தீர்க்க முடியாமல் வேதனைகள் யடைய நேரிடும் அவர்களின் கூட்டுறவை அறவை தள்ளி விடு உன் சொந்தமனையாளினுல் அநேக விசமான தீமைகள் உன்குடும்பத்தின் உண்டாவ தோடல்லாமல் வெளியிலிருந்தும் பல கெடுதல்கள் விளைவிப்பான் ஆகையினுல் நீ ஸ்ரீ முருகபெருமானை அனுதினமும் மறவாமல் துதித்து வந்தால் இன்னல் நீங்கி சுகம் பெறுவாய் நவக்கிரகங்களைச்சுற்றி ஒரு மண்டலம் தீபம் போட்டுவரவும் ஏழைகளுக்கு அன்னமிட்வும் ஒவ்வொரு செவ்வாயன்று விரதமிருந்து வரவும் அப்படி நடந்து வருவதானுல் நீ உனக்கிருக்கும் பலயிடையூறுகள் விலகி எவ்வித தொழில் செய்தாலும் லாபத்தோடு வெற்றிக் காண்பாய் உன்வாக்கு மேன்மையுண்டாகும் அஞ்சாதே சுபம் மத்திபம்!

# 50-வது பாட்டு கொடிசம்பங்கி

போச்சுதடா உன்வினைகள் அற்றுப்போச்சி
பொல்லாத பகைவரெல்லாம் நேசமாச்சி
வாச்சுதடா மேன்மைபெற்ற லாபமுண்டு
வந்தவினை அத்தனையும் ஒழிந்துபோச்சி
ஏச்சல் இனிஉனக்கில்லை பயமேயில்லை
எடுத்ததொரு காரியங்கள் தடையேயில்லை
நீச்சருட பகையெல்லாம் நசித்துப்போச்சி
நீ நினைத்தொரு அத்தனையும் லகுவாய்ஆச்சே

உரை :—ராசி பலனைக்காண ஆவல் கொண்டவரே உன் பூர்வ புண்யத்தாலும் தெய்வ வழிபாட்டினாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் உனக்கு ஆண்டவன் எவ்விதமான குறைபாடின்றி செல்வம் கொடுத்திருக்கிறார் உன்னுடன் எதிர்த்துப் போராடிய கபட சிநேகிதர்கள் அத்தனைப்பேரும் இப்பொழுது உன்னைக் கண்டு அடிபணிய நேரிடும் நீ செய்யும் தொழில் எதுவானாலும் உனக்கு நல்ல லாபமும் உன் வாக்கிற்கு மதிப்பும் உண்டாகும் நீ பயப்படாதே மாடு மனை வாங்குதல் புதிதாய் பண்ணைவைத்து நடத்துதல் 2000 பேர் வேலை செய்யும்படியான தொழில் சாலைகள் வைத்து நடத்துதல் முதலிய அரும்பெரும் செல்வாக்குண்டு நற்புத்திரங்களைப்பெற்று அகமகிழ்வாய் உத்தியோக உயர்வு பெரியோர்களினால் உனக்கு பலவித லாபகரமான பொருள் சேர்க்கையும் உண்டாகும் நீ அஞ்சாதே ஆனால் நீச்ச புத்திசாலிகளின் உறவை நீக்கி நடந்தக்கொள் ஏழை எளியோர்களிடம் அன்பாய் நடந்துக்கொள்வதுடன் தான தர்மங்களும் செய்துவர இன்னும் பலவிதத்திலும் மேன்மை பெற்று பூலோக குபேரனைப்போல் வாழ்வாய் தெய்வத்தை வழிபடுவதை சிறிதேனும் மறவாதே சுபம் உத்தமம்.

# 51-வது பாட்டு மன்மதபானமலர்

உண்டப்பா செய்த்தொழிலில் லாபமுண்டு
உத்தமனே பிரிந்தவர்கள் கூடலுண்டு
பண்டப்பா பெரியோர்கள் வைத்துப்போன
பழமையடா பெரியபொருள் உனக்கேகிடடும்
அண்டப்பா அடுத்தவர்கள் ஆதரிப்பார்
ஆனதொரு தொழிலெல்லாம் லாபமுண்டு
வண்டரப்பா அவர்களுட துணையை நீக்கு
வண்மையுற்ற குருமுனியின் பாதம்போற்று.

உரை :—யோகபலனைக் கேட்கவந்த நண்பரே—அதிர்ஷ்டசாலியான உனக்கு யெந்த விதத்திலும் தீங்குவர யிடமில்லை நெடுநாளாக பிரிந்துபோன உனது நண்பர்களே உறவினர்களோ திரும்ப உன்னை வந்து பார்த்து பெருமைக்கொள்ளுவதும் அன்புடன் யிருந்து உனக்குற்ற ஏவல்களை கவனைத்துடன் செய்து முடிப்பதுமான பிரிய சிநேகிதர்கள் கூடுவார்கள் நீ அஞ்சாதே முன்னேர்கள் தேடிவைத்துப் போனபொருள் மறுபடியும் அது உனக்கே கிடைக்கும் உனக்கு எவ்விடம் சென்றாலும் புதிய சிநேகிதர்களால் ஆதரவு கிடைக்கும் நீ செய்யும் எத்தொழிலிலும் லாபம் கிடைக்கும் பயப்படவேண்டாம் நீ எக்காரணத்தைக் கொண்டும் துஷ்டர்களுடன் சேருவதோ அவர்கள் சொல்லைக்கேட்டு நடப்பதோ நம்பாதே வெகு ஜாக்கிரதையாக எதிலும் நடந்துக்கொள் நீ கடவுள் பதியை மறந்துவிடாதே தர்மம் செய்வதையும் விடாதே உனக்கு ஓரு பெரிய மனிதர் உறவு கிட்டும் அச்சமயத்தில் ஏமாந்துவிடாமல் அவரின் உதவியை பெற்றுக்கொள்ள வழியைத்தேடு அவசரப்பட்டு எதிலும் இறங்காதே. சுபம் ! உத்தமம்.

# 52-வது பாட்டு வளையாஞ்சாம்பரம்

பணமென்ற ஆசையது மெத்தவுண்டு
பலிக்குமது நினைத்தபடி பயப்படாதே
குணமுள்ள உனக்கெதிரி பலபேர் உண்டு
குடிகெடுக்க நினைத்தாலும் உனக்கேலாபம்
மணம்புரிய வருகுமொரு மாதினாலே
மற்றதொரு புதியமனை கிடைக்கும்பாரு
இனமாக சகலமும் உன்மனம்போல் கூடும்
இயம்பினதோராமுனிவன் சொல் பொய்யாதே.

உரை:—யோக திசையில் உயர்ந்தவரே—உனது பலனைப்பற்றி தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறாய் உனது சிறந்த அறிவினாலும் திறமை மிக்கத் தொழிலினாலும் எப்படியும் பணம் தேடி நல்ல ஒரு நிலையான வாழ்க்கை உண்டு பண்ணிக்கொள்ள நீ நினைக்கிறாய் பயப்படாதே உன் காரியம் விரைவில் அனுகூலமாகி வெற்றிகிடைக்கும் உனக்குநண்பரைப்போல பாவனைக் காட்டி வஞ்சக சூழ்ச்சி செய்ய மறைமுகமான எதிரிகள் உண்டு ஆனால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. ஓர் புதிய உறவு உனக்கு கிடைக்கும். அவரால் நீ நினைத்திருக்கும் விவாகம் முடியும். அதற்கு பின் உன் எண்ணங்கள் வெற்றி பெறுவதை நீ காண்பாய் நீ செய்யும் தொழிலின் மேன்மையால் அதிக லாபமடைந்து புதியதொரு வீடு வாங்க வாய்ப்புக் கிடைக்கும். நீ விரும்பாத பல நன்மைகள் உன் நண்பர்களால் உதவியாக நீ பெறுவாய் எவ்வித நஷ்டமும் துன்பமும் இனி உன்னை யணுகாது எதற்கும் தெய்வ வழிபாட்டை விடாதே பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் சூரிய நமஸ்காரம் செய்து வரவேண்டும், விரைவில் உன் எண்ணங்கள் முடியும் அஞ்சாதே. சுபம்! மத்திபம்.

# 53-வது பாட்டு லேடி கீனகாம்பரம்

பொய்யாக போகுமடா நீ நினைத்ததெல்லாம்
புண்ணியனே உனக்குசனி யெட்டில் நின்ருன்
மெய்யாக எத்தொழிலிலும் நஷ்டம் நஷ்டம்
மெலிவுடனே பாலர்களுக்கு ரோகம் உண்டாகும்
நெய்யாதே சிநேகிதர்கள் பகையாய் போவார்
நா லத்தில் அரசர்பயம் நேரும்பாரு
வையாதே இம்மாதம் கழிந்ததாஞல்
வைத்ததொரு கவலையெல்லாம் நீங்கிப்போமோ.

உரை :—சாஸ்திரம் பார்க்கவந்த பெரியோரே வேதனையுற்ற நெஞ்சமும் தீராக்கவலை நோயால் வாடிமனச் சோர்வடைந்து யினி நமக்கு வாழ்வு ஏது ஓர் நல்ல நிலைக்கு வர முடியுமா யாருடைய தயவினுல் நாம் பிழைக்கலாம் கடவுள் சோதனையில் இருந்து நாம் எப்பொழுது விடுபடுவோம் என்ற வாட்டத்தோடு நிற்கிறீர், உமது கிரக நிலை சரியற்றதாக யிருப்பதால் உன் குடும்பத்தில் குழந்தைகளுக்கு ரோகமும் சிநேகிதர்கள் பகையும் கடன்காரர் தொல்லையும் குடும்பக் கலகமும் எதிரிகளின் ஏளனமும் நாளுக்கு நாள் வறுமைப் பிணியின் கொடுமையும் தீர இன்னும் மூன்று மாதம் ஆகும் அதற்கிடையில் நீ அடையும் நஷ்டத்திற்கு ஓரளவுக் கிடையாது பிறருதவியை நாடினும் வீணே ஆகும் இந்நிலை மார பிரதி குருவாரம் விரதமிருந்து உன்னுல் யியன்றது ஏழைகளுக்கு தானமாகக் கொடு படிப்படியாக நன்மைகள் கிடைக்கும் அஞ்சாதே. சுபம் ! மத்திபம்.

# 54-வது பாட்டு பன்னீர்ப்பூ

எண்ணிவந்த விவாகமது கூடுமப்பா
எடுத்ததொரு தொழிலெல்லாம் லாபமாச்சி
பண்ணவே லாபடிவரும கவலேவேண்டாம
பகையாளர் அண்ணன் தம்பி வுறவே வேண்டாம்
நண்ணியே பெரியோர்கள் நேசமுண்டு
நஷ்டமில்லை எத்தொழிலும் பலிக்கும்பாரு
கண்மணியே ஒருவரது உதவியுண்டு
கருத்துப்போல் நடக்குமென கவலைத்தீரே.

உரை :—ஆரூடம் பார்க்கவந்த ஆவல் கொண்டவரே உனது ராசி நிலை உச்சம் பெற்றிருப்பதால் நீ எதற்தும் அஞ்சி நடுங்க அவசியமில்லை நீ ஏற்கனவே நினைத்து தவறிப்போன பெண்ணே திரும்ப உனக்கே திருமணம் முடியும் எடுத்தத் தொழிலிலெல்லாம் லாபகரமாய் கிடைக்கும் ஆனல் உன்னுடைய பிதுர் வர்க்கத்தாரோ மாதுூர்வர்க்கத்தாரோ அவர்களுடைய உறவையும் அண்ணன் தம்பிகள் முதலியவர்களின் நட்பையும் நீ எப்பொழுதும் நீங்கி விடுவதும் அவர்களின் உறவை மறப்பதும் தான் உன் காலா நிலைமைக்கு தக்கவாறு நன்மை கிடைக்கும் அவர்கள் மறைமுகமாக உன்னை சூழ்ச்சி செய்ய முயற்சிப்பார்கள் உனக்கு பெரிய மனிதரின் உறவு உண்டாகும் அவரால் சில பொருள் உதவியும் ஆபத்து சமயங்களில் தாமதிக்காமல் உறுதியான வாக்குடன் சகாயம் செய்வதும் உனக்கேற்படும் அஞ்சாதே எடுத்தக் காரியத்தில் வெற்றியும் கடவுள் பக்தியும் உன்னிடத்தில் ஏற்படும் எப்பொழுதும் உன்குல தெய்வத்தை வணங்க மறக்காதே தானதர்மம் செய்யவும், சோமவாரம் விரதமிருந்து சிவபெருமானை வணங்கி தீபம் போட்டு வர சர்வ காரியமும் நன்மையாக முடியும் பயப்படாதே வஞ்சகர் உறவை நீக்கு. சுபம் ! உத்தமம்.

# 55-வது பாட்டு மஞ்சாம்பரம்

தீரப்பா வினையெல்லாம் தீர்ந்துபோச்சு
திரமான நன்மையது வருகலாச்சு
காரப்பா கன்னிகையினால் லாபமுண்டு
கண்மணியே உனக்கொருவர் உதவியாவார்
பாரப்பா மூன்றுதிங்கள் மேலேசெல்ல
வளமான குருவுனக்குப் பலனைக்கூட்டும்
நேரப்பா யாருனக்குச் சொல்லப்போறார்
நிலையாக வால்மீகி மொழிந்தேன் பாரே.

உரை :—யோகபாவத்தை உணரவந்த யோகவானே — தீர்க்கதரிசியான நீ எவ்விதமான குறைவும் இல்லாத வண்ணம் ஆண்டவன் உனக்களித்திருக்கின்றார் உன் மனைவியின் உதவியினால் அநேக வித பொருள் வரவும் அன்பான சினேகிதர்களின் நட்பினால் உனக்கெத்தொழிலும் லாபமும் வெற்றியும் உண்டாகி புகழோடு வாழ்வாய் ஆனால் அதிக லாபமும் புதுமனை வீடு கட்டுதல் தோட்டத்துறவு வாங்குதல் முதலிய ஆதாயம் ஏற்பட்டு சுகபோகமாக வாழ இன்னும் மூன்று மாதத்தில் குருவின் கடாக்ஷம் கிடைக்கும் அவர் சொந்தமான ஆட்சிக்கு வருகிறார் பிறகு எத்தொழிலும் மேன்மையான லாபமும் பிரியமான பெரியோர் நட்பும் ஆதரவும் பூலோக குபேரனைப்போல் வாழ வழி யுண்டாகும் கசடர்களின் உறவை நீ அவசியம் நீக்கவேண்டும். அவர்கள் நட்புடன் நடந்துக்கொண்டாலும் உனக்கு மறைமுகமாய் தீங்கு விளைவித்து அவமான மடையக்கூடிய வழியே செய்வார் வியாழக்கிழமை விரதம் நீ இருந்து வரவும் விரதமிருக்கும்போது நவக்கிரகத்திற்கு தீபம் போட்டு சுற்றி வரவும் ஏழைக்கு அன்னமிடவும் பசுவுக்கு புல்லோ கீரையோ பருத்தியோ ஏதாவதொன்றை கொடுத்துவிட்டு பிறகு விரதம் முடிப்பது நலம். சுபம்! உத்தமம்.

# 56-வதூ பாட்டு மருடம்பூ

மொழிந்திட்ட வார்த்தையெல்லாம் வீணாய்போச்சி
முயற்சித்த தொழிலாலே நஷ்டமாச்சி
அழிந்திட்ட பொருளப்பா அநேகம் உண்டு
அனியாயம் உனக்கு ஒருவர் துணையுமில்லை
நலிந்திட்ட மனைவிமக்கள் உடலே சேதம்
நன்மையில்லை துணையில்லை நம்பிடாயே
மொழிந்திட்ட முனிவனுட சொல்லை நம்பு
மூர்க்கருட நேசமதை விலக்குவாயே

உரை :—ராசிப்பலனைக் கேட்க ஆவல்கொண்டவரே— உன்னுடைய கிரகராசி சரியான நிலையில்லாததால் நீ எதையும் செய்யத்துணியாதே, ஆலோசித்துச் செய் சமயம் நீ எத்தொழிலை செய்தாலும் லாபமடைய முடியாது. ஏற்கனவே பலவித தொல்லையாலும் தொழிலாலும் நஷ்டமடைந்திருக்கிறாய். உன் மனைவி குழந்தைகள் முதலியவர்கள் உன்னை பிரிய நேரிட்டிருக்கும். ஈனச் சடங்குகளும் உன் வீட்டில் நடந்து உன் மனம் மிகவும் வாடி அவதியுற்றிருக்கிறாய், உனக்கொருவரும் உதவிசெய்ய முன்வர யாருமில்லையே யென்று அடிக்கடி வேதனைக்குள்ளாகி தற்கொலைப் புரிய நீ நினைத்து வாடிய உள்ளத்துடன் இருக்கும் நீ கடவுளையே நொந்துக்கொண்டிருக்கிறாய் பயப்படாதே, இன்னும் 6 மாதத்திற்குள் கிரகங்கள் நல்ல திசைக்கு வருவதால், சகல காரியங்களிலும் வெற்றி காண்பாய், பிரிந்தவர் கூடுவார். மறைந்தவர்கள்போல் திரும்ப உன் மனதிற்கிசைந்த பெண்டிர் பிள்ளைகள் வாய்த்து மனமகிழ்ச்சியடைவாய் ஆகையினால் உன் குலதெய்வத்தை வணங்குவதோடல்லாமல் ஸ்ரீ கணேச மூர்த்தியையும் ஒரு மண்டலம் பூஜித்து தீபம் போட்டு வெள்ளை எருக்கன் புஷ்பம் சாத்தி அர்சித்து வந்தால் நல்ல பயனடையலாம் அஞ்சாதே.சுபம் மத்திபம்

# 57-வது பாட்டு நீலோர்பலம்

விலக்கிடாய் மனவருத்தம் மெத்தவுண்டு
வெளியூரு போனவர்கள் விசனமுண்டு
துலேகிடாய் உனக்குப்பல கஷ்டமுண்டு
துன்பமுண்டு கடனுண்டு வறுமையுண்டு
கடங்கிடாய் கந்தனுட கருணையாலே
கண்மணியே இன்னும் ஒரு மாதமாமே
விலதிடாய் கோபமுடன் நடந்திடாதே
வேண்டியதோர் நன்மையது கிட்டும்பாரே.

உரை :—ஆரூட பாவத்தை அறிய ஆவல்கொண்டவரே மனக்கவலே நிறைந்த நீ எக்காரியத்தில் ஈடுபட்டாலும் சோர்வடைவடைவதன்றி ஒருவிதமான லாபமும் வெற்றியும் கிடைக்கவில்லேயே யென்று அதிகமான வேதனேக்குள்ளாக்கி கடவுளேயே நொந்துக்கொண்டிருக்கிருய் அஞ்சாதே இன்னும் 30 தினம் கழிந்துபோனுல் உனக்கு மனவருத்தம் வுண்டு கடன்காரர் சூழ்ச்சியினுல் நீ கச்சேரி போக நேரிடும் அவமான சொல்கள் கேட்டு அதிகமானக் கவலேக்குள்ளாகி எங்காவது சென்றுவிடலாமென்று நினேக்கிருய் கலங்காதே அற்பருட தொல்லே நீங்கவும் சுபகாரியங்கள் செய்யவும் புதிதாக ஒரு தொழில் ஆரம்பிக்கவும் பெரியோர்களின் அன்பை பெற்று அவரால் பல நன்மைகளே யடையவும் நீ கந்தப் பெருமானே வணங்கிவந்தால் சகல காரியத்திலும் வெற்றி யுனக்கே சஷ்டி உபவாசமும் சாதுக்களுக்கு அன்னமிடுதலும் மறக்காதே எப்பொழுதும் முருகனுடைய ஸ்தோத்திரங்களே படிக்க மறக்காதே. சுபம் ! மத்திபம்.

# 58-வது பாட்டு காசி அலரி

பார்யென்ற குறையது ஒன்றுமில்லை
பாரினிலே செய்தொழில் விருத்தியாச்சி
நேரென்ற விவாகமது கூடலாச்சி
நிலையென்ற பகையாளர் உறவுபோச்சி
ஆரென்று புதியதொரு சிநேகமுண்டு
அப்பனே தொட்டபொருள் விருத்தியாகும்
காரென்று கந்தனுட பாதம்நம்பி
கண்மணியே பூஜையது வலுவாய்போடே.

உரை :—சாஸ்திரம் அறியவந்த சற்ஜனரே—உன் வாழ்வில் எவ்விதக்கெடுதலோ கஷ்டப்படவேண்டிய நிலைமையே காண யிடமில்லாமல் வாழும் நீமனக்கவலைப்பட வேண்டிய நிலை சில அசம்பாவிதமான சினேகிதர்களால் நேர்ந்தாலும் அஞ்சாதே அவர்களின் உறவை நீக்குஉனக்குமுயற்ச்சித்தபெண்ணை திருமணம் செய்ய ஏதுவுண்டு கஷ்டமோ சூழ்ச்சியோ யில்லாமல் திருமணம் நடைபெறும் ஏற்கனவே செய்த தொழிலால் லாபமிருந்தாலும் ஓர் புதிய நண்பரிறைல் செய்ய முயற்சிக்கும் எத்தொழிலிலும் அதிக லாபமும் அழியாப் புகழும் வாக்கில் மேன்மையும் கிடைக்கும் நீ கடவுள் பக்தியை மறக்காதே தர்மம் செய்வதை நிறுத்தாதே அனுவசியமாய் எதிலும் தலையிட்டு கெட்ட எண்ணம் முள்ளவர்களின் வார்த்தையை நம்பி எதிலும் இறங்காதே திடபுத்தியும் நன்னடத்தையும்தான் மனிதனை உயர்வான நிலைக்குக் கொண்டுவரும் என்பதை கனவிலும் மறக்காதே அஞ்சாதே. சுபம்! உத்தமம்.

# 59-வது பாட்டு துத்திப்பூ

பொருளது கைவிட்டேகி புலம் நீ கலங்குகின்றாய்
அருளுடன் வந்துசேரும் அயலூரில் பலனுண்டாகும்
மருமொழி கவலைவேண்டாம் மைந்தனைப் பெற்றுவாழ்வாய்
குருமொழியாக நம்பிக்குறியை நீ அறிந்திடாயே
அறிந்திடமிகவே தானும்காண்பது நிரூசையாகும்
பிறந்திட சிநேகித்தார் பின்புறபகையே நேரும்
தெரிந்திட நீ வருந்தவேண்டாம் தேவியுட பூஜைசெய்வாய்
பறந்திடும் வினைகள்யாவும் பாரினில் உண்மைதானே.

உரை ;—கிரகபாவனை அறிய எண்ணங்கொண்டவரே ! நீ படும் மனவேதனையைத் தவிர்க்க யாரும் உனக்கில்லையே யென்று நீ புண்படுகிறாய் பயப்படாதே யாரிடம் யண்டினாலும் உன்னிடம் ஆசையாகப்பேசி மறைமுகமான சூழ்ச்சி செய்ய எத்தனித்து மேன்மேலும் அதிக வேதனைக்குள்ளாக்குவார்கள் அதுவுமல்லாமல் நீ எதைச்செய்ய நினைத்துப்போனாலும் அக்காரியத்தில் ஏமாற்றம் அடைந்து வெகு மன வேதனை யடைந்து சித்தப்பிரமை யுடையவனாய் தோன்றுவாய் உன்னைக் காண்பவர்கள் கேவலமாக பேசி இழிவான செய்கைக்குள்ளாக்குவதும் இவைகளை நீ எப்படி சகிப்போம் நமக்கு நல்லக்காலம் வரும் என்பதை நினைத்துவருந்துகிறாய் இன்னும் மூன்று மாதத்தில் நற்பலன் ஏற்படுவதால் துர்க்காதேவியை நீபூஜை செய்துவரவும்செவ்வாய்க்கிழமை விரதமிருக்கவும் பல க்ஷேத்திரங்களுக்குப்போய் வணங்கி வருவதும் நலம் சிறுக சிறுக பலன் உண்டாகும் கவலைப்படாதே போனப்பொருளும் நண்பரால் தொழிலில் லாபமும் கடன்தொல்லை நீங்கி பகைவர் கூட்டங்கள் உன்னிடம் வணங்கி உறவுகொள்வதும் கண்டு மனமகிழ்வாழ் அஞ்சாதே. சுபம் ! மத்திபம்.

# 60-வது பாட்டு வெள்ளை அலரிப்பூ

கிரகமும் பொல்லாதப்பா கவலையும் மிகவும் தோணும்
விரகமும் தீராதப்பா வேணதோர் பொருளும்போகும்
அரவம்வாய் தேரைப்போல அலறியே புலம்பிருய்நீ
உறையது தவறிடாது ஓராண்டுசெல்ல நன்மை
முறையெனும் பிணிதான் மெய்யில்நாளுமே உன்னைவாட்டும்
துறையயன தர்மம்செய்தால் சகலமும் நன்மையாகும்
குலமெனும் தேவதைக்கு கூடியே முறையாம் பூஜை
நலமுடன் செய்வாயாகில் நாளுமே சுகமுண்டாமே.

உரை :—சோதிடம் அறிய ஆவலுள்ள அண்யனே—நீ மிகவும் மனச்சேர்வுற்ற நிலையிலிருக்கின்ருய் உன்னுடைய பொருளெல்லாம் உன்கைவிட்டு போனதுமல்லாமல் பல கயவரின் தொல்லையால் நீ பல இன்னல்களையும் அடைந்து வெகு வேதனைக்கு ஆளாகி யிருக்கின்ருய் எத்தொழிலிலும் நஷ்டமே தவிர லாபமடைய யோகமில்லையே என்று யோசித்து கடவுளையே வருந்தி மிகவும் வேதனைப்பட்டுப் பித்தனைப்போல் தடுமாடுகிருய் இன்னும் ஒரு வருஷம் வரையிலே பலன்தான் அடைய யிருப்பதால் நீ எக்காரியத்திலும் ஈடுபடாமல் இருப்பது நலன் உன் வறுமையின் கொடுமையினுலேயே வேதனைப்பட்டு நொந்தே உனக்கு உடல் பிணி ஏற்பட்டு அதிக தொந்தரவுப்பட்டு வருகிருய் எவ்வித மருந்து சாப்பிட்டாலும் குணமாக வழியே யில்லை நீ தானதர்மங்களாலும் தெய்வ வழிப்பட்டாலும்தான் நீ உன் நிலைமையை தீர்த்துக்கொள்ள முடியும் உன் குலதெய்வத்துக்கு மறவாமல் பூஜைப் போட்டுவந்தால் சிறுக சிறுக நன்மை யுண்டாகும் 30 தினங்கள் சென்ருல் கொஞ்சமாக உன்மன சாந்தி ஏற்படும் பிரதி சனிவாரம் விரதமிருந்து வருவது நலம் நவக்கிரகத்தைச் சுற்றி தீபம் போட்டுவர சகலமும் நன்மையாகும் பயப்படாதே செய்த்தொழிலில் விருத்தியும் பெரியோர்களினுல் பொருளதவியும் விரோதிகளால் அதிக நன்மையும் உண்டாகும். சுபம் ! மத்திபம்.

உ

## வால்மீகர் அருளிச்செய்த

# ஆரூட சாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் |  | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

நன்மை தீமை அறியும்படியாக வருபவர்களை மேற் கண்ட சக்கரத்திலுள்ள ராசியில் ஒன்றைப் புஷ்பத்தினால்

தொட்டுச்சொல்லி அந்த ராசிப் பிரகாரம் கீழே கொடுக்கப் பட்டிருப்பதைப் பார்த்து நன்மை தீமை எளிதில் தெரிந்துச் சொல்லவும்.

| | |
|---|---|
| மேஷம் | கொஞ்சம் தாமதத்தில் நடைபெறும், |
| ரிஷபம் | இந்த எண்ணத்தை விட்டுவிடு. |
| மிதுனம் | நிமிஷத்தில் அனுகூலம். |
| கடகம் | கடைசியில் நன்மை ஏற்படும், |
| சிம்பம் | காரியம் கைகூடாது, |
| கன்னி | கோரிக்கை உடனே நிறைவேறும் |
| துலாம் | சாகவாசத்தில் நன்மை உண்டாகும், |
| விருச்சிகம் | நல்லகாலம் இல்லை ஆசையை விட்டுவிடு. |
| தனுசு | நீ நினைக்கிறபடியே அனுகூலமாகும். |
| மகரம் | தாமதமாக நன்மை ஏற்படும், |
| கும்பம் | காரியம் அனுகூலமாகாது. |
| மீனம் | இராம பாணம்போல் வெற்றி |

# லக்கின தொடுகுறி சாஸ்திரம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் |  | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சி கம் | துலாம் | கன்னி |

ஆரூடம் கேட்க வருபவர்களை மேற்கண்ட சக்கரத்தைப் புஷ்பத்தினால் தொடச்சொல்லி அந்த லக்கினத்திற்குரிய பலாபலத்தை கவனித்துப் பார்த்துச்சொல்லவும்.

1. மேஷத்தைத் தொட்டுக் கேட்பாராகில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்த்துக்கொண்டு வெளியூருக்குப் போய்விட்டார்கள் அவர்கள் போய் இருக்கும் திக்கு தென்கிழக்கு நீ அலைந்து தேடவேண்டாம் அவர்களே வந்து சேருவார்கள்.
2. ரிஷபத்தைத் தொட்டுக் கேட்பதினால் நீ ஒரு கூட்டு வியாபாரம் செய்ய நினைத்திருக்கிறாய் தடையின்றி

லாம் நல்ல லாபம் கிடைக்கும் நீ கூடப்போகிற மனிதர் மிகவும் யோக்கியமுள்ளவர்.

3. மிதுனத்தைத் தொட்டுக் கேட்டால் உனக்கு வீடு வாசல் கிடைக்கும் அதனால் நல்ல பலன் கிடைக்கும் கஷ்டமெல்லாம் விலகி சுகப்படுவாய் முன்னோர்கள் சொன்ன வாக்கு நம்பு.

4. கடகத்தை தொட்டுக் கேட்பதினால் பொன்பொருள் உன் இஷ்டப்படி கிடைக்கும் குறைவில்லை மூத்தோர்கள் சொன்ன இதை நம்பு.

5. சிம்மத்தைத் தொட்டுக் கேட்பதினால் உனக்கு நாலு கால் ஜீவன் ஒன்று போய்விட்டது அது போயிருக்கும் திசை தென்மேற்கு அதைத் தேடப்போனவர்கள் ஓட்டி வருவார்கள் தைரியமாக இரு.

6. கன்னியைத் தொட்டுக் கேட்பதினால் ஒரு ஸ்திரீ வெளிதாண்டிப்போய் இருக்கிறாள் அவள் திரும்பி வரப்போவதில்லை அவள் அவனோடு சேர்ந்திருக்கிறாள் அவள் போய் இருக்கும் திசை தென்மேற்கு மூலை ஆசையை விட்டுவிடு நம்பவேண்டாம்.

7. துலாத்தைத் தொட்டுக் கேட்பதினால் பந்துக்கள் வெளிதேசம் போய் இருக்கிறார்கள் அவர்கள் எப்போது திரும்பி வருவார்கள் என்று வியாகூலப்பட்டுக்கொண்டிருக்கிறாய் அவர்கள் மேற்கு திசையில் சௌக்கியமாக இருக்கிறார்கள் அவர்கள் நாள் சென்று வருவார்கள் தைரியமாக இரு.

8, விருச்சிகத்தை தொட்டுக் கேட்பதினால் நீ பொருளுக்காக ஒருவரை நம்பி இருக்கின்றாய் தடையின்றிக் கிடைக்கும் அவர்களை நம்பலாம் நீ பார்க்கின்ற பெண்ணும் கிடைக்கும் பெண் இருக்கும் திசை வடமேற்கு தடையின்றி விவாகம் நடக்கும்.

9. தனுசைத் தொட்டுக் கேட்பதினால் நீ வடமேற்கு மூலை யாத்திரை போக நினைத்திருக்கிறாய் போனால் வியாதியினால் கஷ்டப்படுவாய் இந்தப்பிரயாணத்தை விட்டுவிடு ஈஸ்வரன் சாக்ஷியாக முன்னோர்கள் சொன்னது இது

10 மகரத்தைத் தொட்டு கேட்பதினாலும் நீ குடும்பத்தில்கலக்கப்பட்டு விட்டு வந்து விட்டாய் உன் பிள்ளையும் பிரிந்து ஓடிவிட்டான் நீ கவலைப்பட வேண்டாம் ஓடிப்போன பிள்ளையும் வந்து சேருவான் உன் மனைவியும் பிள்ளை பெறுவாள் முன்னோர்கள் சொன்னதை நம்பு.

11 கும்பத்தைத் தொட்டுக் கேட்பதினால் நீ வியாதியினால் ரொம்பவும் கஷ்டப் ,படுகிறாய் அது நீங்குவதற்கு நீ இப்போது இருக்கும் வீட்டை விட்டு வடக்குதிசை வேறு வீட்டிற்குப் போனால் வியாதி நீங்கி சுகப்படுவாய் முன் 'னோர்கள் சொன்னபடியே நட

12 மீனத்தைத் தொட்டு கேட்பதினால் நீ நினைத்திருக்கிற காரியம் முடியாது அதனால் நஷ்டம் வரும் நீ தொடுத்திருக்கிற வழக்கும் ஜெயமாகாது. நீ இந்த எண்ணத்தை விட்டுவிடு

இராசி சக்கரம்

| | | |
|---|---|---|
| மேஷம் | மீனம் | சிம்மம் |
| விருச்சி | ரிஷபம் | தனுசு |
| மகரம் | மிதுனம் | துலாம் |
| கன்னி | கும்பம் | கடகம் |

கிரக சக்கரம்

| | | |
|---|---|---|
| குரு | ராகு | புதன் |
| செவ் | சுக்கி | கேது |
| சனி | சூரியன் | சந்திரன் |

பிரச்சனை கேட்க வருபவர்களை இந்த இராசி சக்கரத்தில் ஏதாவதொன்றைப் புஷ்பத்திலுல் தொடச் சொல்லி தொட்ட இராசியைக் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் உடனே இன்ன ராசி சக்கரத்தைப் பார்க்க வேண்டும் என்பது தெரியும் பிறகு கிரஹ சக்கரத்தைக் கவனிக்க வேண்டும்.

இராசியைத் தெரிந்து கொண்ட பிறகு இந்த கிரஹ சக்கரத்தில் ஏதாவதொன்றைப் புஷ்பத்திலுல் தொடச்சொல்லி தொட்ட கிரஹம் எது என்பதைப் பார்த்துக்கொண்டு முன்பு தொட்ட இராசி அட்டவணையில் இந்த கிரகத்தை பார்த்தால் பிரச்சின பலன் கிடைக்கும்

உதாரணம்:— இராசி சக்கரத்தில் ரிஷபத்தைத் தொட்டு விட்டு பிறகு கிரஹ சக்கரத்தில் சுக்கரனைத் தொட்டால் "உன் நினைவிற்கு கெடுதி இல்லை" என்ற பலன் தெரியவரும்.

## மேஷம்

குரு — கடவுள் கிருபை இருக்கிறது.
ராகு — சிநேகிதனுல் மோசம்.

புதன் — கெடுதி இல்லை தைரியமாயிரு
செவ்வாய்— ருசியுள்ள பலகாரம்.
சுக்கிரன் — யோகத்திற்கு குறைவில்லை.
சந்திரன் — பிரயோஜனமில்லை,
சனி — பிரயத்தனம் செய.
சூரியன் — இந்த எண்ணம் வேண்டாம்
கேது —இன்று கேட்கவேண்டாம்.

# ரிஷபம்

கேது — சுலபமாகக் கிடைக்கும்.
குரு — முடிவில் நன்மை.
சூரியன் — இன்று கேட்க வேண்டாம்.
ராகு — உன் இஷ்டப்படியே நடக்கும்,
புதன் — முடிவில் சந்தோஷம்
செவ்வாய் — முயற்சி செய்
சுக்கிரன் — உன் நினைவிற்கு கெடுதி இல்லை
சந்திரன் — கஷ்டத்திற்கு பிறகு சுகம்
சனி — மௌனமாயிரு

# மிதுனம்

சூரியன் — பாலில் பழம் விழும்
சனி — இன்று கேட்க வேண்டாம்
கேது — கொஞ்சம் கஷ்டம்
குரு — தானாகவே நடக்கும்
ராகு — நன்மையுண்டு
புதன் — கிடைத்தால் லாபம்

| | | |
|---|---|---|
| செவ்வாய் | — | கேலி செய்யாதே |
| சுக்கிரன் | — | இதனுல் கஷ்டம் வராது. |
| சந்திரன் | — | நாளைகேள் |

# கடகம்

| | | |
|---|---|---|
| சனி | — | வீணுன எண்ணம் வேண்டாம் |
| சூரியன் | — | நல்லவேலை வந்துவிட்டது |
| கேது | — | கொஞ்சம் பிரயாசை |
| குரு | — | கடவுள் அனுக்கிரகம் |
| ராகு | — | தவருன எண்ணம் வேண்டாம் |
| புதன் | — | இரண்டு நாள் பொறு |
| சந்திரன் | — | இன்று கேட்க வேண்டாம் |
| செவ்வாய் | — | நினைத்த அளவு எதிர்பாராதே |
| சுக்கிரன் | — | நினைத்தது முடியும் |

# சிம்மம்

| | | |
|---|---|---|
| சந்திரன் | — | கஷ்டமில்லை |
| சனி | — | சமயத்தில் நன்மை |
| சூரியன் | — | நன்மை நிச்சயம் |
| கேது | — | மதில்மேல் பூனை |
| குரு | — | தடையின்றி கைக்கூடும் |
| சுக்கிரன் | — | இன்று கேட்கவேண்டாம் |
| ராகு | — | இனி உனக்கு மேன்மை நிச்சயம் |
| புதன் | — | பிரயத்தனப் படவேண்டும் |
| செவ்வாய் | — | உடனே காரியானுகூலம் |

# கன்னி

சுக்கிரன் — நல்ல லாபம் உண்டு
சந்திரன் — கஷ்டம் விலகிப்போகும்
சனி — நல்லகாலம் வரும்
சூரியன் — யோசித்து நட அவசரம் வேண்டாம்
செவ்வாய் — நாளைக்கேள்
கேது — கட்டாயம் கைகூடும்
குரு — தாமதம் செய்யாதே
ராகு — அகங்காரம் வேண்டாம்
புதன் — முடிவில் நன்மை

# துலாம்

செவ்வாய் — கட்டாயம் நன்மை
சுக்கிரன் — முன் நன்மையாகத் தோன்றினும் [பிறகு கஷ்டம்
சந்திரன் — காரியம் அனுகூலம்
சனி — கஷ்டம் கொஞ்சம் உண்டு
சூரியன் — எல்லாம் சரியானபடி நடந்துவிடும்
புதன் — இன்று கேட்க வேண்டாம்
கேது — நல்லகாலம் இருக்கிறது
ராகு — கெடுதி உண்டாகாது

# விருச்சிகம்

புதன் — யோசனைக் கிடையாதா
செவ்வாய் — அதிக சிக்குகள் இருக்கிறது

| | | |
|---|---|---|
| சுக்கிரன் | — | நன்மையுண்டு |
| ராகு | — | நாளைக்கேள் |
| சந்திரன் | — | தைரியமாயிரு |
| சனி | — | பொன் பொருள் லாபம் |
| சூரியன் | — | நல்லதசை யிருக்கிறது |
| கேது | — | கட்டாயம் கஷ்டம் உண்டு |
| குரு | — | கடவுளை தியானி |

# தனுசு

| | | |
|---|---|---|
| குரு | — | இன்று கேட்க வேண்டாம் |
| ராகு | — | இந்த எண்ணம் வேண்டாம் |
| புதன் | — | நினைத்தது முடியும் |
| செவ்வாய் | — | சந்தோஷம் |
| சுக்கிரன் | — | உடனே காரியம் அனுகூலமாகும் |
| சந்திரன் | — | மௌனமாக இரு |
| சனி | — | காரியம் முடிவடையாது |
| சூரியன் | — | சந்தோஷம் உண்டு |
| கேது | — | கவலையை விட்டுவிடு |

# மகரம்

| | | |
|---|---|---|
| குரு | — | தற்சமயம் நல்ல காலம்தான் |
| ராகு | — | பரமானந்தம் |
| புதன் | — | பிரயத்தனம் கொஞ்சம் வேண்டும் |
| செவ்வாய் | — | இது ஒரு கேள்வி அல்ல |
| சுக்கிரன் | — | தாமதமாக அனுகூலமாகும் |
| கேது | — | நாளை கேள் |

| | | |
|---|---|---|
| சந்திரன் | — | தைரியமாக இரு |
| சனி | — | இந்த ஆரூடம் பார்க்க வேண்டாம் |
| சூரியன் | — | நினைத்த அளவு இல்லை |

# கும்பம்

| | | |
|---|---|---|
| கேது | — | ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டம் |
| சூரியன் | — | இன்று கேட்கவேண்டாம் |
| குரு | — | முயற்சியுடன் இரு |
| ராகு | — | நீ நினைத்ததெல்லாம் அனுகூலமாகும் |
| புதன் | — | உன் இஷ்டப்படி காரியம் முடியும் |
| செவ்வாய் | — | இதில் சந்தகமே கிடையாது |
| சுக்கிரன் | — | பக்தியாயிரு |
| சந்திரன் | — | நினைத்தது தர்மதத்தில் முடியும் |
| சனி | — | ஊக்கமாக இரு |

# மீனம்

| | | |
|---|---|---|
| சூரியன் | — | நினைத்த அளவில் கொஞ்சம் முடியும் |
| சனி | — | சமமாக இருக்கும் |
| கேது | — | நாளை கேள் |
| குரு | — | அவசரப்படக்கூடாது. |
| ராகு | — | உன்னுடைய பிரயத்தனத்தை விடாதே |
| புதன் | — | வீண் விரயம்ஆரம்பம் |
| செவ்வாய் | — | நல்ல அதிஷ்டம் |
| சுக்கிரன் | — | கஷ்டத்திற்கு பிறகு சுகம் |
| சந்திரன் | — | நல்ல தசை வரும் |

# நவக்கிரஹ அனுபவ ஆரூடம்

## சக்கரங்களினால் நன்மை தீமை யறிதல்

### 1. சூரிய சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 1 | 8 | 2 | 3 | 9 | 4 | 5 |
| 9 | 4 | 5 | 7 | 6 | 1 | 8 | 2 | 3 |
| 8 | 2 | 3 | 9 | 4 | 5 | 7 | 6 | 1 |
| 6 | 1 | 7 | 2 | 3 | 8 | 4 | 5 | 9 |
| 4 | 5 | 9 | 6 | 1 | 7 | 2 | 3 | 8 |
| 2 | 3 | 8 | 4 | 5 | 9 | 6 | 1 | 7 |
| 1 | 7 | 6 | 3 | 8 | 2 | 5 | 9 | 4 |
| 5 | 9 | 4 | 1 | 7 | 6 | 3 | 8 | 2 |
| 3 | 8 | 2 | 5 | 9 | 4 | 1 | 7 | 6 |

தன் இஷ்ட தேவதையை நினைத்து ஒரு புஷ்பம் எடுத்து சக்கர வீடுகளில் எந்த வரிசையிறாவது ஒரு லககத்தில் ஊன்றி அந்த வரிசையின் நெம்பரிலிருந்து நினைத்த விஷயங்களையும் லக்க நெம்பரிலிருந்து பலன்களையும் அறிக.

வரிசை —1 நினைத்த காரியம் ஆகுமா ஆகாதா?

2 இஜ்ஜீவனம் மேன்மை வருமா வராதா?

3 அதிகார பதவி உண்டா இல்லையா?

4 கண்ட கினவு மெய்யா பொய்யா?

5 விலைவாசி ஏறுமா குறையுமா?

6 இவ்வருஷம் மழை உண்டா இல்லையா?

7 ஊருக்குப் போனல் காரியம் ஆகுமா ஆகாதா?

8 இவ்வருஷம் நல்ல விளைவு உண்டா இல்லையா?

9 விவசாயம் நடத்தினுல் லாபம் உண்டா? இல்லையா?

# 2. ஸோம சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 5 | 4 | 6 | 8 | 7 | 9 |
| 8 | 7 | 8 | 6 | 1 | 5 | 3 | 1 | 2 |
| 5 | 4 | 2 | 9 | 7 | 2 | 6 | 4 | 5 |
| 6 | 5 | 4 | 8 | 9 | 7 | 2 | 3 | 1 |
| 3 | 2 | 7 | 2 | 3 | 1 | 5 | 6 | 4 |
| 9 | 8 | 1 | 5 | 6 | 4 | 8 | 9 | 7 |
| 7 | 9 | 9 | 4 | 5 | 6 | 1 | 2 | 3 |
| 4 | 6 | 3 | 7 | 8 | 9 | 4 | 5 | 6 |
| 1 | 3 | 6 | 1 | 2 | 8 | 9 | 7 | 3 |

## எண்களின் பலன் (காலம்)

| | | |
|---|---|---|
| 1 | லாபம் | 1 மாதம் |
| 2 | நாசம் | 2 நாள் |
| 3 | சிநேகம் | 1½ மாதம் |
| 4 | பீடை | 1 மாதம் |
| 5 | க்ஷேமம் | 1 வருஷம் |
| 6 | கலகம் | 1 மாதம் |
| 7 | தனம் | 2½ வருஷம் |
| 8 | கெண்டம் | 1½ வருஷம் |
| 9 | ப்ரீதி | 1½ வருஷம் |

*பலன் அறிதல்*

1 ஆகும்
2 ஆகாது
3 உண்டு
4 பொய்
5 விலை ஏறும்
6 குறைவு
7 ஆகும்
8 இல்லை
9 உண்டு

# 3. அங்காரக சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 6 | 4 | 5 | 9 | 7 | 8 | 3 | 1 | 2 |
| 3 | 1 | 2 | 6 | 4 | 5 | 8 | 7 | 8 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 2 | 3 | 1 | 5 | 6 | 4 | 8 | 9 | 7 |
| 8 | 9 | 7 | 2 | 3 | 1 | 5 | 6 | 4 |
| 5 | 4 | 8 | 9 | 6 | 7 | 2 | 3 | 1 |

வரிசை 1— வியாபாரத்தில் லாபமுண்டா இல்லையா ?

2 இம்மாடு வாங்கினால் நல்ல கரவல் உண்டா இல்லையா ?

3 இந்த எருது வாங்கினால் நலமா கெடுதியா ?

4 இவ்வயமான கன்னிகையை கொண்டால் சுகமுண்டா ?

5 இந்த குதிரையை கொண்டால் நல்லதா கெட்டதா ?

6 இத்தான்யத்தை நிறுத்தினால் பின்னுக்கு லாபமுண்டா இல்லையா ?

7 இவ்வைத்தியரால் வியாதி தீருமா தீராதா ?

8 இவ்வியாதி தீருமா தீராதா ?

9 இவ்வீடு வாங்கினால் சுகமுண்டா கஷ்டமுண்டா ?

## பலன் அறிதல்

| | | | |
|---|---|---|---|
| 1 | உண்டு | 5 | நலம் |
| 2 | இல்லை | 6 | இல்லை |
| 3 | நலம் | 7 | தீரும் |
| 4 | சுகமில்லை | 8 | தீராது |
| | | 9 | சுகமுண்டு |

# 4. புத சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 4 | 5 | 6 | 7 | [illegible] | 9 | 1 | 2 | 3 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 6 | 4 | 5 | 9 | 7 | 8 | 3 | 4 | 2 |
| 3 | 1 | 2 | 6 | 4 | 5 | 8 | 7 | 8 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 2 | 3 | 1 | 5 | 6 | 4 | 8 | 9 | 7 |
| 8 | 9 | 7 | 2 | 3 | 1 | 5 | 6 | 4 |
| 5 | 6 | 4 | 8 | 9 | 7 | 2 | 3 | 1 |

வரிசை—1 இம் முகூர்த்தத்தில் கல்யாணம் நடத்தினால் நலமா இல்லையா ?

2 இப்பெண்ணைக் கேட்டால் தருவாரா தரமாட்டாரா ?

3 இவ்வருஷம் கல்யாணம் ஆகுமா ஆகாதா ?

4 இந்த வேலைக்கு சிலரை யனுப்பினால் பூர்த்தியாகுமா ஆகாதா ?

5 தப்பிபோன மாடு வருமா வராதா ?

6 இவ்வீட்டில் போன பொருள் வருமாவராதா ?

7 இவ்வீடு நிலைக்குமா நிலைக்காதா ?

8 இவ்வருஷம் கடன் தீருமா தீராதா ?

9 இவருடன் கூடி வாழ்ந்தால் சுகமா கஷ்டமா ?

## பலன் அறிதல்

1 நலம்
2 தரமாட்டார்
3 ஆகும்
4 ஆகாது
5 வரும்
6 வராது
7 நிலைக்கும்
8 தீராது
9 சுகம்

## புதன் சக்கர் தொடர்ச்சி:-

வரிசை—1 இவருக்கு குழந்தை உண்டா இல்லையா?
2 பிறக்கும் குழந்தையினால் நலமா கெடுதியா ?
3 குழந்தை பிறந்தால் வீட்டிற்கு தோஷமுண்டா இல்லையா ?
4 பெண் புஷ்பவதியான காலம் நலமா கெடுதியா?
5 கடன் கொடுத்தால் வருமா வராதா ?
6 இவருக்கு மேன்மை யுண்டா இல்லையா ?
7 இவருக்கு வேலை கிடைக்குமா கிடைக்காதா?
8 இவர் விரோதம் தீருமா தீராதா ?
9 இவருடன் சமாதானம் ஏற்படுமா ஏற்படாதா ?

*பலன் அறிதல்*

| | | | |
|---|---|---|---|
| 1 | உண்டு | 5 | வரும் |
| 2 | கெடுதி | 6 | இல்லை |
| 3 | இல்லை | 7 | கிடைக்கும் |
| 4 | கெடுதி | 8 | தீராது |
| | | 9 | ஏற்படும் |


## நவக்கிரக ஆரூட சிந்தாமணி

மனிதர்களின் சகல கிரக நிலைகளையறிந்து அதனாலடை யத்தக்க நன்மைத் தீமைகளைத் தெரிந்து கொள்ளவும் தீமை களின்று நீங்க வேண்டிய பிராய சித்தாதி சாந்திகளை யுணர வும் இந்நூல் தெய்வீகமாய் ஏற்பட்டதென்று யாவருமறிவர் இந்நூல் 108 பாட்டுகளுக்கு தெளிவாயும் சுலபத்தில் தெரிந்துக்கொண்டு பலா பலன்களை அடையும்படி உரை யெழுதி நல்ல உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டிருக்கிறது. இத்துடன் ருது நூல் விளக்கமும் அடங்கியிருக்கிறது.

*இதன் விலை ரூ* **1**

# 5. பிரகஸ்பதி சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 5 | 4 | 6 | 8 | 7 | 9 |
| 8 | 7 | 9 | 2 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 5 | 4 | 6 | 8 | 7 | 9 | 2 | 1 | 3 |
| 6 | 5 | 4 | 9 | 8 | 7 | 3 | 2 | 1 |
| 3 | 2 | 1 | 6 | 5 | 4 | 9 | 8 | 7 |
| 9 | 8 | 7 | 3 | 2 | 1 | 6 | 5 | 4 |
| 7 | 9 | 8 | 1 | 3 | 2 | 4 | 6 | 5 |
| 4 | 6 | 5 | 7 | 9 | 8 | 1 | 3 | 2 |
| 1 | 3 | 2 | 4 | 6 | 5 | 7 | 9 | 8 |

வரிசை—1 இந்த அதிகாரி நன்மை செய்வாரா மாட்டாரா ?
2 இவ்விடத்தில் கிணர் வெட்டினால் தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா ?
3 இவருடன் சூதாட்டமாடினால் ஜெயிக்குமா தோற்குமா ?
4 பொருள் இவருக்கு நிலைக்குமா நிலைக்காதா ?
5 இவரை கேட்டால் கொடுப்பாரா மாட்டாரா ?
6 இவருக்கு படிப்பு வருமா வராதா ?
7 இவர்பேரில் சந்தேகம் கொள்ளலாமா கூடாதா ?
8 இவர்நேசம் விட்டுப் போகுமா போகாதா ?
9 இப்போது இருக்குமிடம் நலமா கெடுதியா ?

## பலன் அறிதல்

1 செய்வார்
2 கிடைக்காது
3 ஜெயிக்கும்
4 நிலைக்காது
5 கொடுப்பார்
6 வராது
7 கூடாது
8 விட்டுப்போகும்
9 நலம்

# 6. சுக்கிர சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 1 | 6 | 5 | 4 | 9 | 8 | 7 |
| 9 | 8 | 7 | 3 | 2 | 1 | 6 | 5 | 4 |
| 6 | 5 | 4 | 9 | 8 | 7 | 3 | 2 | 1 |
| 1 | 3 | 2 | 7 | 9 | 8 | 4 | 6 | 5 |
| 7 | 9 | 8 | 4 | 6 | 5 | 1 | 3 | 2 |
| 4 | 6 | 5 | 1 | 3 | 2 | 7 | 9 | 8 |
| 8 | 7 | 9 | 2 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 5 | 4 | 6 | 8 | 7 | 9 | 2 | 1 | 3 |
| 2 | 1 | 3 | 5 | 4 | 6 | 8 | 7 | 9 |

வரிசை:—1 ஓடிப்போனவர் அகப்படுவாரா மாட்டாரா?

2 அவருடன் சம்பந்தம் செய்யமுடியுமா? முடியாதா?

3 இவருடன் சண்டை ஏற்படுமா? ஏற்படாதா?

4 இப்போது யாத்திரைக் கூடுமா? கூடாதா?

5 அவ்விவஹாரம் ஜெயிக்குமா தோற்குமா?

6 இவர் உண்மைவாதியா? கபடவாதியா?

7 இவரை நம்பலாமா? கூடாதா?

8 இப்பெண்ணுக்கு இல்லறம் சுகந்தருமா? தராதா?

9 இவர் இல்லறத்திற்கு தகுமா? தகாதா?

## பலன் அறிதல்

| | | | |
|---|---|---|---|
| 1 | லாபம் | 5 | க்ஷேமம் |
| 2 | நாசம் | 6 | கலகம் |
| 3 | சிநேகம் | 7 | தனம் |
| 4 | பீடை | 8 | கெடுதி |
| | | 9 | ப்ரீதி |

# 7. சநீஸ்வர சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 5 | 1 | 3 | 2 | 7 | 9 | 8 |
| 7 | 9 | 8 | 4 | 6 | 5 | 1 | 3 | 2 |
| 1 | 3 | 2 | 7 | 9 | 8 | 4 | 6 | 5 |
| 2 | 1 | 3 | 5 | 4 | 6 | 3 | 7 | 9 |
| 5 | 4 | 6 | 8 | 7 | 9 | 2 | 1 | 3 |
| 8 | 7 | 9 | 2 | 1 | 3 | 5 | 4 | 6 |
| 3 | 2 | 1 | 9 | 8 | 7 | 6 | 5 | 4 |
| 6 | 5 | 3 | 3 | 2 | 1 | 9 | 8 | 7 |
| 9 | 8 | 6 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

வரிசை:—1 இந்த யந்திரம் வாங்கலாமா கூடாதா?
2 இந்த ஆயுதம் வாங்கலாமா கூடாதா?
3 ரேஸ் பந்தயம் வருமா வராதா?
4 திருடர் பயம் உண்டா இல்லையா?
5 இவர்கள் ஒற்றுமையா சச்சரவா?
6 இவரை கேட்கலாமா கூடாதா?
7 இந்த நபர் நல்லவரா கெட்டவரா?
8 மன்னிப்பு ஏற்படுமா ஏற்படாதா?
9 இவர் நிலைப்பாரா போய்விடுவாரா?

## பலன் அறிதல்

| | | | |
|---|---|---|---|
| 1 | லாபம் | 5 | க்ஷேமம் |
| 2 | நாசம் | 6 | கலகம் |
| 3 | செயிக்கும் | 7 | தனம் |
| 4 | பீடை | 8 | கெடுதி |
| | | 9 | ப்ரீதி |

# 8. ராகு சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 8 | 1 | 5 | 6 | 3 | 9 | 4 |
| 3 | 9 | 4 | 2 | 7 | 8 | 1 | 5 | 6 |
| 1 | 5 | 6 | 3 | 9 | 4 | 2 | 7 | 8 |
| 7 | 8 | 2 | 5 | 6 | 1 | 9 | 4 | 3 |
| 9 | 4 | 3 | 7 | 8 | 2 | 5 | 6 | 1 |
| 5 | 6 | 1 | 9 | 4 | 3 | 7 | 8 | 2 |
| 8 | 2 | 7 | 6 | 1 | 5 | 4 | 3 | 9 |
| 4 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 | 1 | 5 |
| 6 | 1 | 5 | 4 | 3 | 9 | 8 | 2 | 7 |

வரிசை:—1 இவர் நேசம் விடலாமா கூடாதா?

2 இந்த தொழிலில் தனம் போடலாமகூடாதா?

3 இந்த ரகசியம் வெளியிடலாமா கூடாதா?

4 ஞானம் ஏற்படுமா ஏற்படாதா?

5 ஆபரணங்கள் எப்போது வாங்கமுடியும்?

6 மடம் எப்போது எப்போது ஏற்படுவது?

7 தீர்த்த யாத்திரை ஸ்தல வாசம் உண்டா? இல்லையா?

8 குருப்ராப்தி உண்டா இல்லையா?

9 யோகசித்தி உண்டா இல்லையா?

*பலன் அறிதல்*

| | | | |
|---|---|---|---|
| 1 | லாபம் | 5 | க்ஷேமம் |
| 2 | நாசம் | 6 | கலகம் |
| 3 | சிநேகம் | 7 | தனம் |
| 4 | பீடை | 8 | கெடுதி |
| | | 9 | ப்ரீதி |

# 9. கேது சக்கரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 9 | 2 | 8 | 7 | 1 | 6 | 5 |
| 2 | 8 | 7 | 1 | 6 | 5 | 3 | 4 | 9 |
| 1 | 6 | 5 | 3 | 4 | 9 | 2 | 8 | 7 |
| 8 | 7 | 2 | 6 | 5 | 1 | 4 | 9 | 3 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 8 | 7 | 2 |
| 4 | 9 | 3 | 8 | 7 | 2 | 6 | 5 | 1 |
| 5 | 1 | 6 | 9 | 3 | 4 | 7 | 2 | 8 |
| 9 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 1 | 6 |
| 7 | 2 | 8 | 5 | 1 | 6 | 9 | 3 | 4 |

வரிசை—: 1 அன்னிய தேச யாத்திரை உண்டா இல்
2 விரக்தி திசை ஏற்படுமா ஏற்படாதா?
3 சாந்த நிலை ஏற்படுமா ஏற்படாதா?
4 பொதுக்காரியங்களில் ஈடுபட முடியும
மு
5 அன்னதானம் செய்ய முடியுமா முடிய
6 வித்தியாதானம்
7 குருபீடம் ஸ்தாபிக்க முடியுமா முடியா
8 வாக்கு வல்லமை உண்டா இல்லையா?
9 ஸ்வரூப சித்தி ஏற்படுமா ஏற்படாதா?

## பலன் அறிதல்

1 லாபம் | 5 க்ஷேமம்
2 நாசம் | 6 கலகம்
3 சிநேகம் | 7 தனம்
4 பீடை | 8 கெண்டம்
9 ப்ரீதி

வால்மீகர் புஷ்பாரூடம் முற்றிற்று

சுபம்! சுபம்!! சுபம்!!!

சீனிவாசா அச்சகம் சூளை, சென்னை-7

மாதம் ஒன்றில் மற்ெருருவர் உதவியின்றி
மனேதைரியத்துடன் சோதிடம் சொல்ல
கற்றுக்கொள்ளும் நூல் ஜாதக கணிதாரம்ப
மெனும்

# சோதிட ஆசான்

*பிரபல சோதிட வித்வான்கள் பத்திராதிபர்கள்*
*நற்சாட்சி பெற்ற நூல்*

ஒவ்வொருவரின் கோச்சார விதிகளும், கிரக ராசிகளும் நக்ஷத்திரப்பலன்களும், கிரக சாரங்களும், கண்டாதி கண்டங்களை பிறர் உதவியின்றி அறிந்துகொள்ளும் முறையும், விவாகம் பொருத்த நிமித்தங்களும், புத்திர சந்தானத்திற்குகந்த பொருத்தங்களும், அந்தரங்களின் அறிய விஷயங்களும் மற்றும் பொருத்தமுள்ள பலவித சோதிட மர்ம விஷயங்ளெல்லாம் இதில் அடங்கியுள்ளது. இது ஒன்று யிருந்தால் வேறு சோதிட புத்தகம் தேவையில்லை.

*நான்கு பாகங்களடங்கியது.* *விலை ரூ.* **6**

# மணிகண்ட கேரள சோதிடம்

ஆதியில் ஓதிவைத்த அகஸ்தியமா முனிவர் அருளிச்செய்த கேரள சோதிடத்தை இதுவரையிலும் மூலமாகயிருந்ததை நித்யானந்த சோதிடர் அவர்களால், நூதனமாய் உரையும் லக்கினத்துக்குறிய சக்கரமும் வெகு விமரிசையாக தெளிவாக பதிப்பித்துள்ளோம், இது ஜோதிடர்களுக்கு இன்றியமையாத நூல் இதனில் அரிஷ்டகாண்டம், நலன் தீங்கு காண்டம் அர்ப்பாயுசு காண்டம் யோக காண்டப் பலாபலக் காண்டம் தீர்க்காயுள் காண்டம் பிரதியோக காண்டம் ஆயுள் காண்டம் பிதி அரிஷ்ட காண்டம் தனக் காண்டம் ரோக காண்டம், புத்திரகிர காண்டம் சகோதர காண்டம் மாதுரர் காண்டம் பிதுர்காண்டம் களத்திர தனுதிபல காகாண்டம் திசைசக்கர காண்டம் சுக்கிர காண்டம் திசை பொசிப்புமாரக காண்டம் முதலிய இத்தியாதி காண்டங்களுக்கு சக்கரங்களுடன் மிக தெளிவான உரை எழுதப்பட்டு நல்லதாளில் அச்சிட்டிருக்கிறது. விலைரூ. **3**

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன், சென்னை-3.

# மலையாள
# மாந்திரீக போதனம்
## இதில்

சகல தேவதைகளின் வசியங்களும் பலவிதமான இடையூறுகளின்றி பாரில் வாழ்வதற்குகந்த வழிகளும் உடல்கட்டு மந்திரம் பேய் பிசாசுகளை ஓட்டும் மந்திரம் சகல தோஷ நிவாரண மந்திரம் ஏவல் வைப்பு பில்லி சூனியம் முதலியவைகளை நீக்குவதற்குண்டான மந்திரம் ராஜவசியம, ஜனவசியம், ஸ்திரீபுருஷ வசியங்களும், பலவிதமான நோய்களை விலக்குதற்குண்டான மர்மமான முறைகளும், விஷ ஜந்துக்களின் கடிவிஷமிறங்கும் மந்திரங்களும், அஞ்சனமை கூட்டும் முறைகளும், மற்றும் அநுபவமான மாந்திரீக மார்க்கங்களும் சிரமத்தைப் பாரதூரமிக்க எளிய நடையில் பல மாந்திரீக நிபுணர்களின் மேற் பார்வையைக் கொண்டு பிழையற பரீக்ஷித்து மந்திரம்கற்றுக் கொள்ள மிக சுலபமான முறையில் தெளிவுடன் அச்சிடப்பட்டுள்ளது.

இதில் அநேக பூஜா சக்கரங்களும் அடங்கியது.

இதன் விலை ரூ. **1-25**

கிடைக்கும் இடம்:—

ஷண்முகானந்த புத்தகசாலை, பார்க்டவுன்: சென்னை-3.